விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 19 வியாழக்கிழமை (03.07.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 196

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# இன - மத வெறுப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும்!

## ஐ.நா. நிபுணர் குழு கோரிக்கை

(ஜெனிவா) இன மற்றும் மத நம்பிக்கை ரீதியான வெறுப்புணர்வுகள் தூண்டப்படுவதை நிறுத்த இலங்கை துரிதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மத சுதந்திரம், சிறுபான்மை பிரச்சினைகள் மற்றும் விசாரணையற்ற கொலைகள் சம்பந்தமாக மூன்று ஐ.நா. நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமூகங்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு பொறுப்பான தீவிரவாத பார்வை கொண்ட பௌத்த குழுக்கள் சட்டத்திற்கு முன் கொண்டு வரப்பட வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர். 19 ஆம் பக்கம் பார்க்க....

## 153 அகதிகளுடன் அவுஸ்.படகு வருகை

(கொழும்பு)

இலங்கை தமிழர்கள் 153 பேரை ஏற்றிய இரு படகுகள் இலங்கையை வந்தடையவுள்ளது. அவுஸ திரேலியா நோக்கி இந்தியாவிலிருந்து ஆபத்தான கடற் பயணத்தை மேற்கொண்டிருந்த 153 இலங்கை தமிழர்களையும்ஏற்றிய இரு படகுகளே வரவுள்ளதாக தகவல்க்ள் வெளியாகியுள்ளன.

இப் படகுகள் நேற்று மாலை அல்லது இன்று அதிகாலை இலங்கையை வந்தடையும் என எதிர் பார்க்கப்படுகிறது. (எ-11)

## முகமாலை பகுதியில் மனித எச்சம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - முகமாலை பகுதியில் நேற்று மீட்கப்பட்டுள்ள சடல எச்சங்கள் விடுதலைப் புலிகளுடையது என்றோ, அது பெண் ஒருவருடையது என்றோ முழுமையான முறையில் அடையாளப்படுத்த முடியாது என பளை பொலிஸாரை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இத்தாவில்- முகமாலை ஆகிய இரு கிராமங்களுக்கும் மத்தியில் கலோரஸ்ட் நிறுவனத்தினால் கடந்த 2 வருடாங்களுக்கும் மேலாக கண்ணி வெடி 20 ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கிலிருந்து 4 தமிழர்கள் படகுமூலம் தமிழகம் சென்றனர்



(சென்னை)

மன்னார் மற்றும் வவுனியா பகுதிகளை சேர்ந்த 4 பேர் படகு மூலம் நேற்று அதிகாலை அகதிகளாக தனுஷ்கோடி சென்றடைந்தனர்.

மாங்குளம் சதீஷ், குளத்து மோட்டை ரவீந்திரன், தோணிக்கல் சாந்தி மற்றும் மலர் ஆகிய நால்வரும் நேற்றுமுன்தினம் மாலை மன்னாரில் இருந்து படகு ஒன்றில் கிளம்பியுள்ளனர்.

நள்ளிரவு தனுஷ்கோடி பகுதியல் உள்ள மணல் திட்டு அருகே மார்பளவு தண்ணீ 20 ஆம் பக்கம் பார்க்க....

## முல்லைத்தீவில் சனியன்று ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வு

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் முல்லைத்தீவில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த அமர்வு எதிர்வரும் ஐந்தாம திகதி முதல் எட்டாம் திகதி வரை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

5 ஆம், 6 ஆம் திகதிகளில் புதுக் குடியிருப்பு பிரதேச செயலகத்திலும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் கரைத் துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலும் அமர் 20 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை மீது பொருளாதாரத் தடை சிரேஷ்ட அமைச்சர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் விசாரணை இறுதியில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படக் கூடிய சாத்தியங்களும காணப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பேருவளையில் நடைபெற்ற ஆளும் கட்சி பாராளு மன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வின் போது இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இரண்டு தரப்பினராலும் மேற்கொள் ளப்பட்ட யுத்த குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளது.

விசாரணை நிறைவில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டால் எவ்வாறு அந்த சவால்களை சந்திப்பது என்பது குறித்து இந்த செயலமர்வில் கவனம் செலுத் தப்பட்டுள்ளது.

ரஷயாவும் சீனாவும் இலங்கைக்கு ஒத்துழைப்பு 20 ஆம் பக்கம் பார்க்க....

## வட்டரெக்க தேரருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

பொலிஸாரை தவறாக வழி நடத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட வட்டரெக்க விஜித்த தேரர் இம்மாதம் 7 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் தேரர் நேற்று பாணந்துறை நீதவான் 20 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவமாகினர் 30 தமிழ்ப் பெண்கள்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கு அண்மையில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ் யுவதிகள் 30 பேர் நேற்று புதன்கிழமை தங்களது பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறினர்.

இந்நிகழ்வு முல்லைத்தீவு இராணுவத் தலைமை 20 ஆம் பக்கம் பார்க்க....

# பகிரங்க அரசியலுக்கு வருவாரா பாதுகாப்புச் செயலர் கோத்தபாய

## மனோ கணேசன் கேள்வி



(கொழும்பு)

ஜனாதிபதி அழைப்பு விடுத்தால் தான் அரசியலுக்கு வருவதற்கு தயார் என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

உண்மையில் கோத்தபாய ஏற்கெனவே திரைமறைவு அரசியலில் இருக்கிறார். ஆகவே இனிமேல் அவர் பகிரங்க அரசியலில் இறங்க வேணடும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

அத்துடன், அவரது இந்த கருத்தை நான் சாதகமாக பார்க்கின்றேன். இன்றைய செயலாளர் கோத்தபாய, நாளை அமைச்சர் கோத்தபாயவாக மாறி பகிரங்க அரசியலுக்கு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். தம்பியின் விருப்பத்தை புரிந்து கொண்டு, உரிய அழைப்பை அண்ணன் விடுக்க வேண்டும் என நான் பகிரங்கமாக கோருகிறேன்.

இதுவரை கேள்விகளுக்கு பதில் கூறாத திரைமறைவு அரசியல் செய்து வரும் கோத்தபாய, இனிமேல் பகிரங்கமாக பாராளுமன்றத்தில் பதில் கூறும் நிலைமை இதனால் ஏற்படும்.

இது நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

கோத்தபாயவின் பகிரங்க அரசியல் ஆர்வம் இன்று 20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non refundable Deposit (Rs.)(Bid fee) | Security Deposit(Rs) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Orthopaedic Workshop | 500.00 | 48,000.00 | 91 | 2.3 | C8 |
| Repair of Roof Ward No 31 | 500.00 | 22,000.00 | 91 | 1.0 | C9 |
| Renovation of Physiotherapy Unit, Renovation of Occupation Therapy Unit and Interlock paving Medical Clinic front side | 500.00 | 45,000.00 | 91 | 2.2 | C8 |
| Renovation of Eye Male Ward No 19 | 500.00 | 80,000.00 | 91 | 3.9 | C8 |
| Renovation of Eye Female Ward No 15 | 500.00 | 47,000.00 | 91 | 2.3 | C8 |
| Renovation of ENT Clinic and Renovation of Medical Clinic area | 500.00 | 61,000.00 | 91 | 3.0 | C8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 04.07.2014 until at 4.00 pm on 17.07.2014 during office hours. The payment shall be made to the Shroff, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 18.07.2014, late bides will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

Director (Chairman) Regional Procurement
03/07/2014. (C-7802) Committee, Teaching Hospital, Jaffna.

# மரண அறிவித்தல்



## திருமதி
## சந்திரகுமார் மாலினி

துன்னாலை வடக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியா குருமன் காட்டை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமான திருமதி சந்திரகுமார் மாலினி 30.06.2014 அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் துன்னாலையைச் சேர்ந்த மிருகண்டு – சாந்தமலர் தம்பதியினரின் மகளும், மாணிக்கம் – மகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், சந்திரகுமாரின் அன்பு மனைவியும், டிஷாந்தினி, டிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தினி, சேவல்கொடி, காலஞ்சென்ற ஜெயக்கொடி, வசந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரன், ஸ்ரீதாரணி, கணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும், தர்மிகா, தர்மிஷன், ஹர்ணி ஆகியோரின் சிறிய தாயாரும், நிருஷனின் அத்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பிரான்சில் உள்ள மலர்ச்சாலையில் பிற்பகல் 3.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

Mrs.சாந்தினி
இல.50/16, கோயில் வீதி,
குருமன்காடு, வவுனியா.
0033629284026, 0242222772

தகவல்:-
குடும்பத்தினர்.
(6612)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES

Applications are invited by me up to 01.08.2014 from suitably qualified persons for the following posts.

## 1. WORKS SUPERINTENDENT (ELECTRICAL), GRADE II

**Qualifications:**

a) National Diploma in Technology (NDT) or equivalent qualifications **and** have at least four years experience in the relevant field after obtaining such qualifications.

NOTE: Period of in-plant training will not be counted for the four years' experience.

**OR**

b) National Certificate in Technology (NCT) or equivalent qualifications **and** have at least ten years experience in the relevant field after obtaining such qualifications.

**Salary Scale :** U-MN2 (II) - Rs.19,470 - 18 x 245 - 23,880 p.m.

**Selection** : By Interview

## 2. SUPERVISOR (CIVIL), GRADE III

**Qualifications:**

a) National Certificate in Technology or equivalent qualifications with 3 years experience may be obtained while following the NCT course;

**OR**

b) G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with at least 5 years' experience as a Supervisor in the relevant field in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment.

**Salary Scale:** U-MT1 (IIIA) - Rs.16,535 - 7x155; 10x185 - 19,470 p.m

**Selection** : By Interview

## 3. POST OF PHARMACIST (LOWER GRADE)

**Qualifications:**

Certificate of competence as a qualified Pharmacist recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 - 19,470 p.m.

**Selection** : By Aptitude Test and Interview

## 4. POST - ELECTRICIAN, GRADE II

**Qualifications:**

i. Pass in the 8th standard.

ii. Should be conversant with

a) Detecting faults, repairs and assembly of materials, transformers and all types of machinery and appliances, cables, wires and their ratings, measuring instrument and their uses various types of wiring, joining, testing meters and small transformers;

b) Reading and understanding drawings and diagrams. Reading scales and record fractional dimensions;

c) Care and the use of the tools in the trade.

iii. Not less than 2 years' experience as an electrician in a government department, State Corporation or in a recognized establishment.

**Salary Scale :** U-PL 3 (III) - Rs.15,650 – 16 x 140 – 17,890 p.m

**Selection** : By Trade Test and Interview

**AGE LIMIT : Not more than 45 years for the above all posts.**

**Note:** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non –Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x10cm. in size. Only Applications sent on the specified form will be accepted.

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.


Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

REGISTRAR
01.07.2014 (C-7803)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தசுவாமி கோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன உத்தமோ உத்தம (33 குண்டம்) மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

04.07.2014



பான் தமிழ் ஒளியின் அலைவரிசையான ஓம் ரிவியில் நேரடி ஒளிபரப்பு நடைபெறும். காலை 8.00-11.00 மணிவரை

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

(காலை 8.40 முதல் 10.27 மணிவரை) இன்றைய தினம் முப்பத்துமூன்று குண்ட மகாயாகம் காலை 8 மணிமுதல் இரவு 11.30 மணிவரை நடைபெறும். 05.07.2014 (சனிக்கிழமை) இரவு 7 மணிக்கு இந்தியாவில் புகழ்மிக்க அக்கினி இசைக்குழுவின் இன்னிசை கானம் இடம்பெறும். இலங்கை வரலாற்றில் முதன் முறையாக ஈழத்து இந்திய தவில், நாதஸ்வர கீழேயுள்ள கலைஞர்கள் ஒரே சமயத்தில் சங்கமிக்கும் தவில், நாதஸ்வர கச்சேரி நாளை கும்பாபிஷேக நிகழ்வின் போது இடம்பெறும்.

1. இணுவில் கந்தசுவாமி கோயில் சரஸ்தான வித்துவான்கள் மு.கோவிந்தராசா K. செல்வராசா குழுவினர்
2. அளவையூர் M.P. பாலகிருஸ்ணன் குழுவினர்
3. இணுவையூர் K.R. சுந்தரமூர்த்தி குழுவினர்
4. அளவையூர் S.S.சிதம்பரநாதன் குழுவினர்
5. கோண்டாவில் V.K. பஞ்சமூர்த்தி குமரேஸ் குழுவினர்
6. சாகித்திய இசைஞான அரசு N.R. கோவிந்தசாமியின் புதல்வன் N.R.K. இரத்தினகுமார் குழுவினர்
7. இணுவையூர் K.R. புண்ணியமூர்த்தி குழுவினர்
8. யாழ்ப்பாணம் V. தட்சணாமூர்த்தி அவர்களின் புதல்வர் T. உதயசங்கர் குழுவினர்
9. N.R.சின்னராஜாவின் புதல்வர்கள் N.R.S. ரவீந்திரன் குழுவினர், N.R.S. சுதாகரன் குழுவினர்
10. இணுவையூர் N.R. சந்தான கிருஸ்ணன் குழுவினர், நாதஸ்வரஇசைத்திலகம் இணுவையூர் R. சிவபாதம் குழுவினர்
11. அளவையூர் R.கேதீஸ்வரன், R.ஞானேஸ்வரன் குழுவினர்
12. அளவையூர் A. சுதந்திரன் குழுவினர்
13. வடலியடைப்பு M.கோவிந்தசாமி குழுவினர்
14. நெல்லியடி இரத்தினம் குழுவினர்
15. இணுவையூர் S.சிவகரன் குழுவினர்
16. இணுவையூர் R. சாமிநாதன் குழுவினர்
17. இணுவையூர் R. கோவிந்தசாமி குழுவினர்
18. அளவையூர் V. ஸ்ரீதரன் குழுவினர்
19. இணுவையூர் K.ஸ்ரீஸ்கந்தராசா குழுவினர்
20. வழக்கம்பரை R.சிவகுமார் குழுவினர்
21. இணுவையூர் V.நிருபாகரன் குழுவினர்
22. இணுவையூர் S.கண்ணபிரான், எஸ்.ராசன் குழுவினர்
23. இணுவையூர் S.ராமதாஸ் குழுவினர்
24. இணுவையூர் S.சிவதாஸ் குழுவினர்
25. இணுவையூர் S.கல்யாணசுந்தரம் குழுவினர்
26. இணுவையூர் K.பஞ்சாபிகேசன் குழுவினர்
27. இணுவையூர் K. சச்சிதானந்தம் குழுவினர்
28. இணுவையூர் R.பாஸ்கரன் குழுவினர்
29. இணுவையூர் U.பாலகிருஸ்ணன் குழுவினர்
30. இணுவையூர் N.வீராசாமி புதல்வர்கள் குழுவினர்
31. கோண்டாவில் R.முருகானந்தன் குழுவினர்
32. கோண்டாவில் S.சிவதாஸ் குழுவினர்
33. ஈழநல்லூர் பிச்சையப்பா அவர்களின் புதல்வர்கள் P.ரஜீவன், P.ரஜீந்திரன் குழுவினர்
34. ஈழநல்லூர் P.S.பாலமுருகன் குழுவினர்
35. தாவடியூர் K.குகன் குழுவினர்
36. கோண்டாவில் M. ஆனந்தன் குழுவினர்
37. கோண்டாவில் R.ஆனந்தகணேசன், R. வசந்தன் குழுவினர்
38. தாவடி K.நாகதீபன் குழுவினர்
39. K.கிருஸ்ணதாசன் குழுவினர்
40. இணுவையூர் K.இளங்கீதன் குழுவினர்
41. இணுவையூர் N.பிரதீபன் குழுவினர்
42. மானிப்பாய் N.நடராஜா, பிரசன்னா குழுவினர்
43. சுதுமலை N.கோபி குழுவினர்
44. சுதுமலை N.மது குழுவினர்
45. சுதுமலை N.ராஜன், N.நந்தன் குழுவினர்
46. வட்டூர் N.C. இராமநாதன் குழுவினர்
47. சித்தன்கேணி M.தில்லை, R.கண்ணன் குழுவினர்
48. பருத்தித்துறை S.விஜயகுமார், S.சதீஸ்குமார் (ஜதீஸ்குமார்)
49. உடுப்பிட்டி P.மயூரன், P.செந்தூரன் குழுவினர்
50. நெல்லியடி L.S. சிவனேசன் குழுவினர்
51. V.சித்தார்த்தன், V.பிரதீர்த்தன் குழுவினர்- சாவகச்சேரி
52. P. பஞ்சமூர்த்தி குழுவினர்
53. சுன்னாகம் N. பிரதீபன் குழுவினர்
54. காரைநகர் N. கணேசன் அவர்களின் புதல்வர்கள் K. பவப்பிரியன், K.சந்திரன் குழுவினர்
55. K. உதயசங்கன் குழுவினர்
56. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் ஆஸ்தான வித்துவான் R. இந்திரன் குழுவினர்

அன்பர்கள் அனைவரும் இன்றும் நாளையும் நடைபெறும் கும்பாபிஷேகத்தில் கலந்து இஷ்ட சித்தி களைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்

மதுரசாலினி அரைக்கும் ஆலை &இன்டஸ்ரி
தரமான மிளகாய்த்தூள் உற்பத்தியாளர்கள்,
எமது தயாரிப்புக்கள் இப்போது அனைத்து பலசரக்கு கடைகளிலும் விற்பனையாகிறன.
இணுவில் மேற்கு, இணுவில்.

RS Telesoon Phone Shop
Kaithady Road,
Inuvil.
TP:-077 0453511

அனைத்து விதமான பலசரக்கு பொருட்களைப் பெற்றிட
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில் (துரைவீதி சந்தி)

KS TYRE HOUSE (Pvt) Ltd
K.K.S. Road,
Inuvil, Jaffna.
T.P:- 021 224 2266,
077 377 6943

LANKA FILLING STATION
S.Tharmavarathan
Maruthanamadam.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 13 இலட்சம் ரூபாவை மோசடி செய்த

# நெல்லியடி வர்த்தகருக்கு எதிராக கொழும்பு வர்த்தகர் வழக்கு தாக்கல்

(கரணவாய்)

கொழும்பு புடைவை வர்த்தகர் ஒருவரை 13 இலட்சம் ரூபா வெற்றுக்காசோலையால் ஏமாற்றிய நெல்லியடி புடைவை வர்த்தகர் ஒரு வருக்கு எதிராக கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. •

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,


கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்னர் நெல்லியடி வர்த்தகர் கொழும்புக்கு சென்று 13 இலட்சம் ரூபா பெறுமதியான புடைவைகளை கொள்வனவு செய்து அதற்கு பதிலாக 13 இலட்சம் ரூபா காசோலையை கொடுத்துள்ளார்.

இதன் பின்னர் கொழும்பு வர்த்தகர் காசோலையினை மாற்றுவதற்கு வங்கிக்கு சென்றுள்ளார்.

இதன்போது தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நெல்லியடி வர்த்தகருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இதன்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதிமன்ற கட்டளையின்படி நெல்லியடி புடைவை வர்த்தகரின் புடைவையகம் சோதனைக்குட் படுத்தப்பட்டு கடையில் உள்ள புடைவைகள் அனைத்தும் எடுத்து செல்லப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (2-60)

நன்றி-மிரர்




# வடக்கு மாகாண சபைக்கு போதியளவு ஒத்துழைப்புக்களை வழங்க தயார்-ராஜித

வடக்கு மாகாண கடற்றொழில் அமைச்சு ஊடாக எதிர்வரும் காலங்களில் மத்திய கடற்றொழில் அமைச்சின் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் வடக்கு மாகாண சபைக்கு போதியளவு ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளதாகவும் மத்திய கடற்றொழில் அமைச்சர் கலாநிதி ராஜித சேனாரட்ன பச்சைக் கொடிகாட்டியுள்ளார்.

இலங்கை கடற்றொழில் தொடர்பான மாகாண கடற்றொழில் செயற்றிட்ட தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த உடனடிநடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் மாகாண கடற்றொழில் அமைச்சரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை தேர்தலின் பின்னர் முதல் முறையாக இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சர்களுக்கான தேசிய மாநாட்டில் வடக்கு மாகாண, மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர்களுடனான தேசிய மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்ற போதே அமைச்சர் ராஜித மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு வாழ் மீனவர்கள் இந்திய இழுவைப் படகுகளில் அத்துமீறிய தொழில் நடவடிக்கையினால் கடுமையாக பாதிக்கப்படுவதாக மத்திய அமைச்சரிடம் மாகாண கடற்றொழில் அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேரடியாக முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வரும் வடக்கு மாகாண சபைக்கு போதியளவு ஒத்துழைப்பை வழங்க மத்திய கடற்றொழில் அமைச்சர் முன்வந்துள்ளமை எமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு எதிர்வரும் காலங்களில் மாகாண கடற்றொழில் அமைச்சு ஊடாக மத்திய அமைச்சு தனது திட்டங்களை முன்னெடுக்கவுள்ளமை மட்டற்ற மகிழ்ச்சியை எம க்கு ஏற்படுத்தியுள்ளது.

மத்திய அரசானது மாகாண கடற்றொழில் அமைச்சர்களின் மாநாடு ஒன்றை நடத்தி கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களை சேர்ந்த மாகாண அமைச்சர்களின் சம்மேளனம் ஒன்றை உருவாக்குவதையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைவதுடன் கடந்த 30 வருடகால யுத்தத்தினால் எமது வட மாகாணம் மிகவும் பாதிப்படைந்து சகல துறைகளிலும் பின்தள்ளப்பட்டுள்ளது.

எனவே, எமது மாகாணத்தை துரிதகதியில் அபிவிருத்தி செய்ய அனைவரும் முன்வரவேண்டும் என இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வகையில் எமது மத்திய அமைச்சர் எமது மக்களுக்கு பல்வேறு உதவிகளை செய்துள்ளார். இன்னும் செய்வார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

எமது மாகர்ணத்தில் உள்ள மீன்பிடி குடும்பங்களின் பிள்ளைகள் யுத்தம் காரணமாக கல்வியில் பின்தங்கியுள்ளமை மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவ வேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும்.

எமது வடமாகாண மக்களின் பிரச்சினைகள் ஏராளம் உள்ளன. அவற்றையெல்லாம் சொல்ல எனக்கு நேரம் போதாது. இருந்தாலும் முக்கியமான விடயங்கள் சிலவற்றை இங்கு முன்வைக்க விரும்புகின்றேன்.

இங்கு பிரதானமாக எமது கடல் வளம் அழிக்கப்படுகின்றது. அதில் இந்திய மீனவரின் வருகையும் அவர்களின் றோலிங் முறையிலான மீன்பிடி மூலம் கடலடி வளங்கள் அனைத்தும் அள்ளப்பட்டு செல்கின்றன. அத்துடன் அவர்கள் எமது கண்ணுக்கெட்டிய தூரத்தில் நின்று தொழில் புரிகின்றனர்.

இந்த நிலைமையினை தடுக்க இரு நாடுகளும் இராஜதந்திர முறை யினை கையாள்வதன் மூலம் இரு நாடுகளுக்குமான உறவு பாதிப் படையாத வண்ணம் தீர்த்துக் கொள்ளலாம்.

எமது மக்களின் தொழில் முறைகள் கூட சில பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. எமது மக்கள் 18 வகையான தடை செய்யப்பட்ட தொழில்களை செய்து வருகின்றனர். உதாரணமாக டைனமேட், சிலிண்டர், சுருக்குவலை போன்றன.

ஆனாலும் மக்கள் சில தொழில்களை பாரம்பரியமாக செய்து வருகின்றனர். உதாரணமாக கூடு வைத்தல். தங்கூசிவலை என்பன இவர்களை இந்த தொழிலை செய்ய விடாது உடனடியாக தடுக்க முடியாது. ஏனெனில் இதை நம்பியே பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவர்களுக்கு உரிய பொருத்தமான தொழில் முறைகளை ஏற்படுத்தி அவர்களை பலப்படுத்துவதுடனாகவே தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை இல்லாதொழிக்க முடியும்.

இதற்கு மத்திய அரசு தன்னாலான முழுமுயற்சியையும் மேற்கொள்ள வேண்டும் என இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

இதை நாம் செய்யாது விட்டால் எமது எதிர்கால சந்ததி பெரும் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படும்.

அத்துடன் மீனவர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் மானியத்தை நிறுத்தி அதற்கு பதிலீடாக பொருட்கள் வழங்க திட்டமிட்டுள்ளதாக மக்கள் அறிந்து அதை நிறுத்த வேண்டாம் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆழ்கடல் மீன்பிடி முறையையும் ஏற்படுத்த வேண்டும். இதற்கு பொருத்தமான கடற்கரைகளில் இறங்கு துறைகளை அமைக்க வேண்டும். உதாரணமாக யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மீன்கள் உற்பத்தியாகும் காலப்பகுதியில் எமது மீனவர்களை கடலுக்கு செல்ல விடாது நிறுத்தி ஏனைய நாடுகள் மேற்கொள்வது போன்று அக்காலப் பகுதிகளுக்கு மாற்றீடாக அவர்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு எமது மக்களுக்கு தேவையான நவீன மீன் பதனிடல் நிலையம் அமைத்தல், மீன்குஞ்சு வளர்ப்புத் திட்டங்களை உருவாக்கல் போன்ற திட்டங்களை எமது மாகாணங்களில் ஏற்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மீன்பிடி துறையில் மட்டுமல்லாது சகல துறைகளிலும் மத்திய மாகாண அரசுகள் இணைந்து செயற்படுவதனூடாகவே எமது நாட்டை அபிவிருத்திக்கு இட்டுச் செல்லலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# நுண்கலைப்பீட மாணவன் மீது சக மாணவர்கள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் மருதனார்மடம் நுண்கலைப்பீட மாணவன் மீதுசக மாணவர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் நுண்கலைப்பீடத்தில் கல்வி பயிலும் முஹமட் அசாம் (வயது23) எனும் மாணவன் படுகாயமடைந்தார்.

இதில் படுகாயமடைந்த மேற்குறித்த நுண்கலைப் பீட மாணவன் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே குறித்த மாணவன் மீது சக மாணவர்கள் தாக்குதல் மேற் கொண்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த முறுகல் நிலை ஒருவாரத்துக்கு முன்னதாகவே நீடித்து வந்ததாக சகமாணவர்கள் தெரிவித்தனர். (2-4)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபராகப் பணியாற்றி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற என்.தெய்வேந்திரராஜாவின் பிரிவு உபசார விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது இறை வணக்கம் இடம்பெறுவதையும் மாணவர் ஒருவரினால் நினைவுச் சின்னம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடியேற்றம்

(கரணவாய்)

கரணவாய் அண்ணாசிலையடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கொடியேற்றம் இன்று வியாழக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை பூங்காவன உற்சவத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிமை வேட்டைத்திருவிழாவும் இடம் பெற்று 12 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறுமென பிரதமகுரு சிவசுப்ரமணிய சர்மா அறிவித்துள்ளார். (2-60)

# தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தத்தை அரசு ஏற்றால் மக்களை வீதியில் இறக்கி போராட்டம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

**இலங்கையில் பிரிவினையை ஏற்படுத்தும் தென்னாபிரிக்காவின் முயற்சியின் பின்னணியில் இந்தியா, ஜப்பான் மற்றும் அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா வாசுதேவ நாணயக்கார உட்பட பலர் உள்ளனர் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொது செயலாளர் டாக்டர் வசந்த பண்டார குற்றஞ் சாட்டியுள்ளார். தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் மக்களை வீதியில் இறக்கி போராடுவோம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னாபிரிக்காவின் பதில் ஜனாதிபதி ரமபோஷா தலைமையிலான குழுவினர் இராஜதந்திர விஜயமாக இலங்கை வருவதையும் ஜனாதிபதி உட்பட அரசியல் தலைவர்களை சந்திப்பில் எந்த விதமான ஆட்சேபனையோ எதிர்ப்போ கிடையாது.

ஆனால், இலங்கையில் அரசியல தீர்வு மற்றும் நல்லிணக்க செயற் பாடுகளை மேற்கொள்வதற்கு உதவும் தென்னாபிரிக்காவின் குழுவாக இலங்கை வருவதையும் தலைவர்களை சந்திப்பதையும் கடுமையாக எதிர்க்கின்றோம்.

அவ்வாறானதோர் மத்தியஸ்தம் எமக்கு அவசியமில்லை. ஏற்கனவே ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் நோர்வேயின் சொல்ஹெய்மை மத்தியஸ்தராக ஏற்றுக் கொண்டதால் விடுதலைப் புலிகள் பலமடைந்து யுத்தம் உக்கிரமடைந்தது. பிரிவினை தலைதூக்கியது.

இன்று அரசாங்கம் தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தத்தை உத்தியோகபூர் வமாக ஏற்றுக்கொண்டால் அன்றைய ஐ.தே.க. அரசுக்கும் இன்றைய அரசுக்கும் வித்தியாசமில்லை என்பதாகவே அமையும்.

அவ்வாறான நிலைமை ஏற்படுமானால் தேசிய அமைப்புக்களின் ஆதரவு இந்த அரசாங்கத்திற்கு இல்லாமல் போகும்.

அது மட்டுமல்லாது இதற்கெதிராக மக்களை வீதியில் இறக்கி போராடுவோம்.

தென்னாபிரிக்காவின் பின்னணியில் இலங்கையில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி பிரிவினையை ஏற்படுத்தும் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளே உள்ளன.

அது மட்டுமல்லாது அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களான நிமால் சிறிபாலடி சில்வா வாசுதேவ போன்று வேறும் பலரும் உள்ளனர்.

எனவே, தென்னாபிரிக்காவின் பொறியில் சிக்கினால் அதிலிருந்து மீள முடியாது போகும் என்றும் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்தார். (2)

## முகவர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து பல்வேறு வகையான பொருட்களை குடாநாட்டில் விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பல முகவர்கள் சில பிரச்சினைகளை அவ்வப் போது எதிர்கொண்டு வருவதாக பல தட வைகள் யாழ். வணிகர் கழகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்கள்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வுகளை முன்னிலைப்படுத்தும் வகையிலான கலந்துரையாடலொன்று 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழக பணிமனையில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனைத்து விநியோகத்தர்களும் முகவர்களும் முக்கியமான தீர்மானம் மேற்கொள்ளவிருப்பதால் தவறாது இக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது. (அ)

# அரச சேவை ஆணைக்குழு ஜனாதிபதியினால் நியமனம்



(கொழும்பு)

தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு அமுலில் இருக்கும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அரச சேவை ஆணைக்குழுவை நேற்று முன்தினம் நியமித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சத்யா ஹெட்டிகே நியமிக்கப்பட்டுள்ளார்.

எஸ்.சீ.மாணப்பெரும, ஆனந்த செனவிரத்ன,எஸ்.எச்.பத்திரண, எஸ்.தில்லைநடராஜா, எஸ்.ஏ. மொஹமட் நஹறியா, காந்தி விஜேதுங்க, சுனில்.ஏ.சிறிசேன, வைத்திய நிபுணர் சொய்சா குணசேகர ஆகியோர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

அரசியல் அமைப்பின் 55 ஆவது விதிகளின்படி அரச நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் அரச ஊழியர்களின் ஒழுங்கு விதிகள் போன்ற அனைத்து அதிகாரங்களும் இந்த அரச சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சரவை செயலாளர் சுமித் அபேசிங்க, ஜனாதிபதியின் செயலணி பிரதானி காமினி சேதர செனரத் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-2)

## நாட்டில் இளைஞர்கள் மத்தியில் நீரிழிவு நோய் அதிகரிப்பு

### ஆய்வில் தகவல்

இலங்கையில், இளைஞர்கள் மத்தியில் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு நீரிழிவு நோய் அதிகரித்துள்ளதாக ஆய்வு முடிவு ஒன்று கூறுகிறது.

குறிப்பாக 22 முதல் 30 வயதிலான இளைஞர்கள் மத்தியில் இந்த நோய் அதிகரித்துள்ளதாக குறித்த ஆய்வு தெரிவிக்கிறது.

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இதுகுறித்து ஆய்வுகள் நடைபெற்று வந்தாலும், நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் இது மேற்கொள்ளப்படவில்லை.

கிராமங்களைவிட நகரப் பகுதியிலேயே நீரிழிவு நோயின் தாக்கம் அதிகம் உள்ளது.

மக்களிடையே நீரிழிவு நோய், அதன ஆபத்து, வாழ்க்கை முறையை மாற்றி அமைக்க வேண்டிய தேவை ஆகியவை குறித்து அரசு பல விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தாலும், அவை போதிய அளவில் இல்லை என்று, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறையின் தலைவர் டாக்டர் சுந்தரேசன் தமிழோசையிடம் தெரிவித்தார். (2)

## கொலை அச்சுறுத்தல்; அஸ்வர் முறையீடு

தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் கூறியுள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு செவ்வியளித்த போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தொலைபேசி அழைப்புக்கள், குறுந்தகவல்கள் மூலமாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சில முஸ்லிம் கடும்போக்குடைய அரசியல்வாதிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எனக்கு எதிராக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

ஜனாதிபதியையும் என்னையும் தொடர்புபடுத்தி ஆபாச வார்த்தைகளினால் திட்டி சிலர் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கின்றனர்.

எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் சில தரப்பினர் பொய்ப்பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஐம்பது ஆண்டு காலமாக சிங்கள - முஸ்லிம் நல்லிணக்கத்திற்காக பாடுபட்டு வருகின்றேன்.

பேருவளை, அளுத்கம சம்பவங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளது.

நாட்டில் மீண்டும் போர் இடம் பெற அனுமதிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொலை மிரட்டல் தொடர்பில் அஸ்வர் எம்.பியிடம், பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளனர். (2)

## இராசி பலன்

**03.07.2014**
**(ஆனி 19, வியாழக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு**
**சஷ்டி பின்னிரவு 12.19 மணிவரை**
**பூரம் மாலை 6.50 மணிவரை**
**இராகுகாலம் 1.27-2.57 மணிவரை**
**சுபநேரம் 7.27-8.57 மணிவரை**
**குமார சஷ்டி விரதம்,**
**இரவு நடேசர் அபிஷேகம்**

வளவன்

**மேடம்** — அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, பணக் குறைவுகள் ஏற்படும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**இடபம்** — கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், பயந்த சுபாவமுண்டு, பிரயாண சுகமுண்டு, சுப செலவுகள் கூடும், செய்தொழிலில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள்.

**மிதுனம்** — மனோ தைரியம் கூடும், இஷ்டசித்தியுண்டு, நற்கீர்த்தியுண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படலாம், அந்நியர் சந்திப்பால் மன மகிழ்ச்சி ஏற்படும்.

**கடகம்** — மனோ சங்கடங்கள் உருவாகலாம், போசன சுகக் குறைவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, பண விரயம் கூடும், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் உருவாகலாம்.

**சிம்மம்** — வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயன சுகமுண்டு, பெரியோரின் அனுசரணைகள் கிடைக்கப் பெறுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கன்னி** — சோம்பலை விலக்குவது நல்லது, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், மனச் சஞ்சலங்கள் கூடும், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில இழுபறிகள் ஏற்படலாம்.

**துலாம்** — உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சயன சுகமுண்டு, வருமானம் உயர வழிவகை செய்வீர்கள், முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** — பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், ஆரோக்கியமான நாள், உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** — ஆன்றோர் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சரீரப் பிரயாசையால் தொழில் முன்னேற்றம் பெற முயற்சிப்பீர்கள், எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்** — தேக நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், பொருள் விரயங்கள் கூடும், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றலாம், காரியங்கள் தாமதமாகும்.

**கும்பம்** — சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், தேக நலனுண்டு, போசன சுகமான நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**மீனம்** — சுவாரஸ்யமான நாள், காரிய அனுகூலமுண்டு, நோய் குணமடையும், ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரதேச சபை செயலாளர் பதவி வெற்றிடம் நிரப்பப்படாமலுள்ளது

## நெருக்கடிக்கு மத்தியில் பணிகள் முன்னெடுப்பு

(மானிப்பாய்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் செயலாளர் பதவி நிரப்பப்படாமல் வெற்றிடமாகவுள்ளதால் சபை பாரிய நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதியுடன் செயலாளர் பதவியுயர்வு பெற்றுச் சென்றமையைத் தொடர்ந்து இன்றுவரை குறித்த ஆளணி நிரப்பப்படவில்லை.

இதனால் சபை சார்ந்த கொடுப்பனவுகள் சம்பந்தமான பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஒப்பந்தகாரர்கள் மற்றும் சபை சார்ந்த வேலைகளுடன் தொடர்புடையவர்கள் கொடுப்பனவைப் பெறமுடியாமல் இடர்ப்படுகின்றனர்.

இதற்கு அமைய மற்றும் வெளிவாரி அடிப்படையிலான ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவும் இதுவரையில் வழங்கப்படவில்லை.

மேற்குறித்த விடயம் தொடர்பில் சபையின் தவிசாளர் தெரிவிக்கையில்,

செயலாளர் நியமனத்தை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதம செயலாளர் மற்றும் முதலமைச்சர் ஆகியோரைக் கோரியிருந்தும் இதுவரை செயலாளர் நியமிக்கப்படவில்லை எனவும் தற்காலிகமாக உள்ளூராட்சி உதவியாளர் ஒருவரை பதிற்கடமையாற்றவும் காசோலைகளில் கையொப்பம் இடுவதற்குமான அங்கீகாரத்தை வழங்குமாறு சபைத்தீர்மானத்தின் மூலமான கோரிக்கைக்கும் எவ்வித பதிலும் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (23)



யா/சிறுப்பிட்டி இந்து ஆரம்ப பாடசாலையின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது யாழ்ப்பாண கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் மற்றும் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிபாளர் எஸ்.சற்குணராஜா ஆகியோர் இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்துள்ளதை படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

## பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் இவ் வருடம் க.பொ.த உயர் தரப்பரீட்சைக்கு முதலாம் மற்றும் இரண்டாம் தடவையாக தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்குதல் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ் அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் தமது பெற்றோர்களுடன் வருகை தருமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (2)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆறாவது ஆண்டு குருபூசை.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆறாவது ஆண்டு குருபூசை வைபவம் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்குதெல்லிப்பழைஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் விசேட பூஜைகள், திருமுறை பாராயணங்களைத் தொடர்ந்து இளைப்பாறிய இசை ஆசிரியர் கலாபூஷணம் வ.செல்லத்துரையின் பண்ணிசை அரங்கமும் பிரார்த்தனையுரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள், மருதனார் மடம் சுந்தர ஆஞ்சநேயர்தேவஸ்தான ஆதீனகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வர குருக்கள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக் ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆகியோர் வழங்குவார்கள்.

முற்பகல் 10.45 மணிக்கு சுன்னாகம்-மயிலணியைச் சேர்ந்த சிவஸ்ரீ. சோமஸ்கந்தக்குருக்கள், உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ.வை.சபாரத்தினக் குருக்கள் ஆகியோரின் கௌரவிப்பு நிகழ்வும் தொடர்ந்து பதினொராம் திருமுறை நூல் வெளியீட்டு விழா நடைபெறும்.

நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி வழங்குவார். நூலின் முதற்பிரதியை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உப தலைவர் ச.ஆறுமுகநாதன் பெற்றுக் கொள்வார். (2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 500 | 650 | 500 |
| தக்காளி | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 160 | 140 | 160 |
| கரட் | 200 | 180 | 200 |
| பூசணி | 60 | 70 | 60 |
| புடோல் | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 70-120 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 240 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 100 |
| பயற்றங்காய் | 120 | 180 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 240 | 200 |
| போஞ்சி | 150 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 70-100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 10-40 | 30 | 25-30 |
| இராசவள்ளி | ·100 | 120 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 63


குமாரதாசன் குமாரசாமி

### பேச்சின் சிறப்பு

- கோபமாய்ப் பேசினால் குணத்தை இழப்பாய்!
- வேகமாய்ப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்!
- வெட்டியாய்ப் பேசினால் வேலையை இழப்பாய்!
- அதிகமாய்ப் பேசினால் அமைதியை இழப்பாய்!
- ஆணவமாய் பேசினால் அன்பை இழப்பாய்!
- **சிந்தித்து பேசினால் சிறப்போடு வாழ்வாய்!**

அபி அபிராமி

**வண்டி 10 நிமிஷம் நிற்கும்**




**டீ/கொபி சாப்பிடுகிறவங்க சாப்பிடுங்க**

மது பாலா



நடத்துனர்:படியில் நிக்காதப்பா; உள்ளேதான் கடல் மாதிரி இடம் இருக்கே உள்ளே வா!
மாணவன்: எனக்கு நீச்சல் தெரியாது அதுதான் கரையிலேயே நிற்கிறேன்.
யாரு கிட்ட...!!

சரவணபவன் கௌமாறன்



கணவன் : உன் பிறந்த நாளுக்கு நெக்லஸ் வாங்கிட்டு வந்திருக்கேன்
மனைவி : கார் வாங்கிட்டு வந்திருக்கலாமல்ல...
கணவன் : கார் கவரிங்ல வராதும்மா...


சச்சி சங்கீத்

எதுவுமே செய்யாமல் இருப்பவன் மட்டுமே சோம்பேறியல்ல; தன்னால் முடிந்ததைச் செய்யாமல் இருப்பவனும் சோம்பேறியே...!

–சாக்கிரட்டீஸ்



சிந்து சிந்துஜன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதவுரிமை மீறல்களை விசாரிக்கும் வல்லமை சர்வதேசத்திற்கு இருக்கின்றது

## அரியநேத்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு எதிரான மனிதவுரிமை மீறல்கள், இனப்படுகொலைகள் சம்பந்தமாக விசாரிக்கும் வல்லமை சர்வதேசத்திற்கு இருக்கின்றது என்பதனை இலங்கை அரசாங்கத்திற்கு சார்பாக அரசியல் நடத்தும் மட்டக்களப்பில் உள்ள அரசியல்வாதிகள் சிலர் புரிந்து கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கூறியுள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள சில அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு சர்வதேச விசாரணை தேவையில்லை என்று வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பாக கருத்துக் கூறும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் கருத்துக் கூறுகையில்,

ஒரு நாட்டிற்குள்ளே வாழ்கின்ற மக்களில் ஒரு பகுதியினர் அந்த நாட்டினை ஆட்சி செய்கின்ற அரசாங்கங்களினால் துன்புறுத்தப்படும் போது அந்த அரசாங்கத்தினால் சரியான நீதி கிடைக்காவிட்டால் அதனை சர்வதேச தலையீட்டிற்கு கொண்டு செல்வதில் எந்தத் தவறும் இல்லை.

கடந்த 66 வருடங்களுக்கும் மேலாக வடகிழக்கில் வாழ்கின்ற தமிழ்மக்கள் இங்கு வாழ்கின்ற ஏன்னய இனங்களுக்கு இருக்கும் உரிமை கிடைக்க வேண்டும் என்று பல்வேறு பேச்சுவார்த்தைகளையும் போராட்டங்களையும் நடத்தி வந்தனர்.

ஆனால், ஆட்சி செய்த அரசாங்கங்கள் எதுவுமே தமிழ் மக்களுக்கான தீர்வினை மாறிமாறி வந்த இரண்டு அரசாங்கங்களும் கொடுக்காததன் விளைவுதான் கடந்த 30 வருடங்களாக ஆயுதப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் வகை தொகையற்ற இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டும், காணாமற் போயும் உள்ளனர். இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மாத்திரம் சொல்லவில்லை.

சர்வதேச மன்னிப்புச்சபை, மன்னார் ஆயர் இராயப்பு யோசப், மற்றும் வெளிநாடுகளின் செய்மதி மூலமாக ஆதாரங்கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில்தான் சர்வதேச மனிதவுரிமை ஆணைக்குழு மூலமாக விசாரணைகள் கோரப்பட்டிருக்கின்றன.

இந்த விசாரணை மூலம் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பிரிவினையும் மக்கள் நிம்மதியற்ற நிலையினையும் ஏற்படும் என்று மட்டக்களப்பில் உள்ள சில அரசியல்வாதிகள் இலங்கை அரசாங்கத்திற்கு துதிபாடுகின்றார்கள் இவர்களது செயற்பாடுகள் பற்றி தமிழ்மக்கள் நன்கு அறிந்திருக்கின்றார்கள்.

இவர்கள் கூறுவது போன்று தமிழ்மக்கள் எந்தவகையில் நிம்மதியற்று இருக்கின்றார்கள் என்று எமக்கு புரியவில்லை. மாறாக 66 வருடங்களாக தமிழ்மக்கள் நிம்மதியற்று இருக்கின்றார்கள் என்று இவர்களுக்கு இன்னும் தெரியவில்லையா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சர்களாக இருக்கின்றார்கள் என்று வைத்துக்கொண்டால் இன்று சர்வதேச ரீதியாக தமிழ் மக்களினுடைய பர்ச்சினை சென்றிருக்குமா? அல்லது வடகிழக்கில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் ஐக்கிய நாட்டுச் சபையில் ஒலித்திருக்குமா? இராணுவ குடியேற்றம் பற்றி யாராவது தெரிவித்திருப்பார்களா?

இவர்கள் வெறுமனே அரசாங்கத்தினை காப்பாற்றுவதற்காகவும் எஞ்சியிருக்கும் வடகிழக்கில் உள்ள தமிழர் பூர்வீக நிலங்களை சிங்கள மக்களுக்கு தாரைவார்த்து கொடுப்பதற்காகவும் அயராது பாடுபட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

ஆனால் த.தே.கூட்டமைப்பு அவ்வாறு இல்லை. மட்டக்களப்பு ஆயர் அதிவணக்கத்திற்குரிய யோசப் பொன்னையா ஆண்டகையும் திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையிலே சர வதேச விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார்கள்.

ஆகவே அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தமிழ் அரசியல் வாதிகள எமது வடகிழக்கு மக்க ளின் பிரச்சினை சர்வதேச ரீதியாக சென்றிருக்கும் இந்த கால கட்டத்தில் அதற்கான உதவியினை செய்யாவிட்டாலும் உபத்திரவத்தினையாவது செய்யாமல் அரசாங்கத்திற்கு வக்காளத்து வாங் குவது சாலப் பொருத்தமானதாகும் என கூறினார். (2)

# பாலியல் துஷ்பிரயோகம்; பிக்குவிற்கு 70 வருட சிறை

## சிலாபம் நீதிமன்றம் தீர்ப்பு

சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகங்களை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கையில் பௌத்த பிக்கு ஒருவருக்கு 70 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிலாபம் நீதிமன்றம் இந்த தண்டனையை நேற்று முன்தினம் வழங்கியது. இவரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு நான்கு சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு அபராதம் செலுத்த வேண்டும் என்றும் பிக்குவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த பிக்குவால் 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறுவர்கள் மீது குற்றங்கள் புரியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குற்றம் சுமத்தப்பட்ட பிக்கு தாம் வறுமை காரணமாகவே தமது தாயால் பிக்குவாக மாற்றப்பட்டதாக குறிப்பிட்டார்.

இதன்போதே தாம் பாலியல் துஷ்பிரயோகங்களை மேற்கொள்வற்கு பழக்கப்படுத்தப்பட்டதாகவும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். (2)

# பிளவுகளை தவிர்த்து செயற்படுவது அனைவரினதும் கடமையாகும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

அரசாங்கத்திற்கு எதிராக கருத்து வெளியிடுவதனால் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வித்தியாசமான கட்சிகளைக் கொண்ட கூட்டமைப்பு என்ற ரீதியில் எந்தவொரு உறுப்பினருக்கும் தமது மாறுபட்ட கருத்தை முன்வைக்க சுதந்திரமுண்டு.

எனவே, அரசாங்கத்திற்கு எதிராக கருத்து வெளியிட்ட காரணத்தினால், அமைச்சுப் பதவிகளை துறக்க வேண்டியதில்லை. கூட்டணி ஆட்சி என்ற ரீதியில் கருத்து முரண்பாடு ஏற்படுவது வழமையானதாகும். முடிந்தளவு பிளவுகளை தவிர்க்கும வகையில் செயற்பட வேண்டியது அனைவரினதும் கடமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள எந்தவொரு தேர்தலுக்கும் ஆய த்தமாகுமாறு ஜனாதிபதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (2)

# தரக்குறைவான எரிபொருளை திருப்பியனுப்ப நடவடிக்கை

## பெற்றோலிய கூட்டுத்தாபனம்

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் உரிய தரத்தில்லாத காரணத்தினால் மீள திருப்பியனுப்ப நடவடிக்கை எடுத்ததாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

மின் உற்பத்திக்காக கப்பலில் தருவிக்கப்பட்ட பேர்னஸ் எண்ணெயை பரீட்சித்த போது அதில் சல்பர் அளவு குறைவாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்படி முழு பேர்னஸ் எண்ணெய் தொகையையும் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. அடுத்த பேர்னஸ் எண்ணெய் கப்பல் ஒரு வாரத்தினுள் இலங்கையை வந்தடையவுள்ளது.

இதேவேளை கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் கப்பல் மூலம் நுரைச்சோலை அனல் மின் நிலையத்துக்கு நிலக்கரி எடுத்து வருவதில் பாதிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (2)

# பேருவளையில் தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது

## பொதுபல சேனா குற்றச்சாட்டு

(கொழும்பு)

பேருவளையில் தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக பொதுபல சேனா இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளித்தல் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளின் முக்கிய களமாக பேருவளை காணப்படுகின்றது என தெரிவித்துள்ளது.


மத வழிபாடுகளையும் மத நிகழ்வுகளையும் நடத்தும் போர்வையில் இவ்வாறான குற்றச் செய ல்கள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

தற்பாதுகாப்பு நோக்கில் பொல்லுகளை எடுத்து தாக்குதல் நடத்திய சிங்கள இளைஞர்களை கைது செய்யும் உரிமை பொலிஸாருக்கு கிடையாது என சுட்டிக்காட்டியுள்ளது. பொலிஸாரோ, எதிர்க்கட்சிகளோ அல்லது அரசாங்கமோ பொதுபல சேனா மீது கை வைப்பதனை தவிர்த்துக்கொள்ளுமாறு கோரியுள்ளது. ஏனெனில், அவ்வாறு கை வைத்தால் ஆபத்து கை வைக்கும் தரப்பினருக்கே என சுட்டிக்காட்டியுள்ளது.

காத்தான்குடி, மட்டக்குளிய, அக்கரைப்பற்று, கல்முனை போன்ற பகுதிகளில் முஸ்லிம் கடும்போக்கு வாதம் பரவி வருவதாகவும், ஹற்றனில் இந்துக்கள், கிறிஸ்தவ மததத்திற்கு மாற்றப்பட்டு வருவதாகவும் பொது பல சேனா குற்றம் சுமத்தியுள்ளது. (2)

# பிரிவுத்துயர் பகிர்வு

### மாகிறீத்தா வேதநாயகம்



குருநகர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட மாகிறீத்தா வேதநாயகம் கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி சந்திரசேகரா அன்னமா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரா அன்னமா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு Cimetiere Intercommunal des Joncherolles, 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### மாரிமுத்து இராசையா



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து இராசையா கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெற்று பின்னர் பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# மீன் ராஜாவும் நானாபோஷோவும்!

நானாபோஷோவின் பாட்டி பெயர் நோக்கோமி. மிகவும் வயதானவள். அவள் தலையில் ஒரு முடிகூட நரைக்கவில்லை. ஆனால், சமீபகாலமாக எண்ணெய் தடவாததால் சில முடிகள் உதிர்ந்துவிட்டன. அதற்காக மிகவும் வருந்தினாள்.

ஒருநாள் நானாபோஷோ விடம் சொன்னாள். குட்டிப் பேரனே, எண்ணெய் தடவாமல் என் தலைமுடிகள் உதிர்கின்றன. உன் தாத்தா இருந்த போது வாங்கித் தந்த எண்ணெய் தீர்ந்துவிட்டது. நீதான் எனக்கு எண்ணெய் கொண்டு வந்து தர் வேண்டும் என்றாள்.

பாட்டி, அந்த எண்ணெய் எங்கே கிடைக்கும்? என்று கேட்டான் நானாபோஷோ.

வடக்குத் திசையில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அந்த ஏரியில் ஒரு மீன் ராஜா இருக்கிறது. அந்த மீன் ராஜாவின் பெயர் மெஷீனா மக்வாயி. உலகத்தில் உள்ள எல்லா மீன்களுக்கும் ராஜா. நீ அந்த ராஜா மீனைப் பிடித்து இங்கே கொண்டு வந்தால், நமக்கு நிறைய எண்ணெய் கிடைக்கும் என்றாள் பாட்டி.

வெற்றியுடன் வருவதற்கு நானாபோஷோவை ஆசீர்வதித்தாள் பாட்டி. மீன் பிடிக்கத் தூண்டிலும் படகும் வேண்டும். நானாபோஷோ ஒரு மரத்தை வெட்டி படகு செய்தான். ஓக் மரக்கிளையால் துடுப்பு செய்தான். பாட்டி, கயிறும் தூண்டிலும் கொடுத்தாள். நானாபோஷோ நதி வழியே வடக்குத் திசையில் படகைச் செலுத்தினான். கடைசியில் ஒருபெரிய ஏரியை அடைந்தான். ஏரியின் நடுவில் படகை நிறுத்தினான். தூண்டில் முள்ளில் இரையைக் குத்திவைத்து, ஏரியில் எறிந்தபடியே பாடினான்... மெஷீனா மக்வாயி மீன் ராஜாவே, தூண்டில் முள் வருவதைப் பார்க்கவில்லையா?

முள்ளின் முனையில் இருக்கும் இரையைக் கவனிக்கவில்லையா? உடனே வந்து இரையை விழுங்கு என்று பாடினான்.

மீன்களின் ராஜாவான மெஷீனா மக்வாயி, ஏரியின் அடியில் படுத்தபடி பாட்டைக் கேட்டது. தன்னை அழைத்துப் பாடுவது யார் என்று அறிய, மந்திரி மீனை ஏரியின் மேற்பகுதிக்கு அனுப்பியது. மந்திரி மீனைப் பார்த்த நானாபோஷோ, உன் ராஜாவுக்குத் தைரியம் இருந்தால், தூண்டில் முள்ளைக் கடிக்கச் சொல் பார்ப்போம் என்றான். மந்திரி மீன் கீழே சென்று ராஜாவிடம் செய்தியைச் சொன்னது. அதைக் கேட்டுக் கடுங்கோபம் கொண்டது மீன் ராஜா. வாலைச் சுழற்றி தண்ணீரில் அடித்தது. ஏரியே கொந்தளித்தது. ஆவேசமாக உருண்டு புரண்டவாறு மேலே வந்தது. வந்த வேகத்தில் நானாபோஷோவின் படகு ஆடித் தத்தளித்தது. குகை போன்ற வாயைத் திறந்தவாறு, மீன் ராஜா ஆவேசமாகப் பாய்ந்து வந்து, நானாபோஷோவையும் படகையும் விழுங்கிவிட்டது. அடுத்த நொடி, மெஷீனா மக்வாயி வயிற்றுக்குள் கிடந்தான் நானாபோஷோ. எங்கும் இருட்டு. எதையும் பார்க்க முடியவில்லை.

எங்கோ ஓர் ஓசை கேட்டது... டொம் டமார்! டொம் டமார்! டொம் டமார்! மீன் ராஜாவின் இதயத்துடிப்புதான் அது என்று நானாபோஷோவுக்குப் புரிந்தது. ஓசை கேட்ட இடத்தில் துடுப்பால் ஓங்கி அடித்தான். மீன் ராஜா செத்துவிட்டது.

அப்போது கர்கர்... கர்கர் என்று ஏதோ சுரண்டுகிற சத்தம். எப்படியோ ஓர் அணில், மீன் ராஜாவின் வயிற்றுக்குள் வந்துவிட்டது. அது வெளியே செல்வதற்காக சுரண்டிச் சுரண்டி, ஒரு வழியை உருவாக்கப் பார்த்தது.

நானாபோஷோ அப்போது வெளியில் இருந்து வரும் வேறொரு ஓசையையும் கேட்டான். டக் டக் டக் டக்.... அவன் கூர்ந்து கவனித்தான். வெளியிலிருந்து ஒரு கடல் காகம், மீன் ராஜாவைக் கொத்தியது.

அணில் உள்ளே சுரண்டியும், கடல் காகம் வெளியே கொத்தியும் ஏற்படுத்திய துளை வழியே, நானாபோஷோ வெளியே வந்தான். அணிலுக்கும் காகத்துக்கும் நன்றி சொன்னான்.

அவர்கள் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். இறந்து போன மீன் ராஜாவை, ஒரு பெரிய மரப்படகில் ஏற்றிக் கட்டினார்கள். ஏரியிலிருந்து நதிக்கு வந்து நதியிலிருந்து வீட்டை நோக்கிப் படகைச் செலுத்தினார்கள். நானாபோஷோ மகிழ்ச்சியாகப் பாடினான்.

ஐலசா... ஐலசா...

மெஷீனா மக்வாயிக்கு ஐலசா...!

நோக்கோமி பாட்டி எண்ணெய் தடவட்டும்

அணிலுக்கும் 'காகத்திற்கும் ஐலசா..!

மூவரும் வீட்டை அடைந்தார்கள். நோக்கோடி பாட்டி, மீன் ராஜாவின் உடலை வெட்டித் துண்டுகள் ஆக்கினாள். ஒரு பாத்திரத்தில் வேகவைத்து, எண்ணெய்யாக மாற்றினாள். கிடைத்த எண்ணெய்யை ஆயிரம் புட்டிகளில் ஊற்றினாள். தினமும் அதைத் தலையில் தடவிக் கொண்ட பாட்டி, ஊரில் இருப்பவர்களுக்கும் கொடுத்தாள். அவர்கள், அந்த எண்ணெய்யைத் தலையில் தடவிக் கொண்டார்கள். பிறகு, அந்த ஊரில் யாருடைய தலை முடியும் உதிரவே இல்லை!




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்


- 324 - ஏட்றியனோப்பில் நகரில் இடம்பெற்ற சமரில் ரோமப் பேரரசன் முதலாம் கொன்ஸ்டன்டீன் லிசீனியசை வென்றான்.
- 987 - ஹியூ காப்பெட் என்பவன் பிரான்சின் மன்னன ஆனான். இவனது வம்சத்தினர் 1792 இல் பிரெஞ்சுப் புரட்சி இடம்பெறும் வரை பிரான்ஸை ஆண்டனர்.
- 1250 - பிரான்சின் ஒன்பதாம் லூயி எகிப்தில் ஏழாவது சிலுவைப் போரில் ஈடுபட்டிருந்தபோது மாய்பர்களால் பிடிபட்டான்.
- 1608 - கியூபெக் நகரம் உருவாக்கப்பட்டது.
- 1754 - ஏழாண்டுப் போர்: ஜோர்ஜ் வாஷிங்டனின் படைகள் நெசசிட்டி கோட்டையை பிரெஞ்சுப் படைகளிடம் இழந்தனர்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: ஜோர்ஜ் வாஷிங்டன் மசாசுசெட்சில் இராணுவத்துக்குத் தலைமை வகித்தார்.
- 1778 - புரூசியா ஆஸ்திரியாவின் மேல் படையெடுத்தது.
- 1844 - ஐஸ்லாந்தில் கடைசிச் சோடி பெரிய ஓக் பறவைகள் கொல்லப்பட்டன.
- 1848 - அமெரிக்கக் கன்னித் தீவுகளில் பீட்டர் வொன் ஸ்கொல்ட்டன் என்பவரால் அடிமைகள் விடுவிக்கப்பட்டனர்.
- 1867 - தமிழ்நாடு விழுப்புரம் வளவனூர் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 1866 - புரூசியாவின் வெற்றியுடன் ஆஸ்திரிய-புரூசியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1872 - யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1890 - ஐடஹோ ஐக்கிய அமெரிக்காவின் 43 ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பெலரஸ்சின் தலைநகர் மின்ஸ்க் சோவியத் படையினரால் நாசி ஜேர்மனியிடம் இருந்து விடுவிக்கப்பட்டது.
- 1962 - பிரான்சுக்கு எதிரான அல்ஜீரிய விடுதலைப் போர் நிறைவு பெற்றது.
- 1969 - சோவியத்தின் என்1 என்ற ஏவுகணை ஏவு தளத்திலேயே வெடித்துச் சிதறியது.
- 2006 - பூமியில் இருந்து 432,308 கி.மீ தூரத்தில் 2004 X-14 என்ற சிறுகோள் பறந்தது அவதானிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1883 - பிரான்ஸ் காஃப்கா, எழுத்தாளர் (இ. 1924)
- 1924 - எஸ். ஆர். நாதன், சிங்கப்பூர் ஜனாதிபதி
- 1942 - அடூர் கோபாலகிருஷ்ணன், கேரளத் திரைப்பட இயக்குநர்
- 1962 - டாம் க்ரூஸ், அமெரிக்க நடிகர்
- 1980 - ஹர்பஜன் சிங், இந்தியக் கிரிக்கெட் வீரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



87

...நீங்கள் கனவு களைத்தான் வளர்த்தீர்கள்; ஆனால் கனவுகள் தேவைப்பட்டன.

வீராங்கன், உதயசூரியன், கரிகாலன், மணிவண்ணன், மாமல்லன் என்றெல்லாம் நீங்கள் பெயர் சூட்டிக் கொண்டபோது தமிழன் தன் இறந்தகால பிம்பங்களைத் தரிசித்தான்.

நீங்கள் கட்டிப்பிடித்து கானம் படித்துக் காதலித்தபோது தமிழன் புதைந்துபோன காதல் பண்பைப் புதுப்பித்துக்கொண்டான்.

உங்கள் தாய்மொழி மலையாளம் என்பதை மறக்கடிப்பதற்கும் நீங்கள் தமிழ்க் கலாசாரத்தில் கரைந்து போனவர் என்று காட்டிக் கொள்வதற்கும் நீங்கள் எடுத்த முயற்சிகள் முழு வெற்றிபெற்றன.


○ மலையாள மரபுப்படி தாயார் பெயரைத்தான் இனிஷியலாகக் கொள்வார்கள். ஆனால், நீங்களோ தமிழ் மரபுப்படி தந்தை பெயரைத்தான் இனிஷியலாகக் கொண்டீர்கள்.

○ உங்கள் தமிழ் உச்சரிப்பின் எந்த ஒரு வார்த்தையிலும் மலையாளத்தின் பிசிறு ஒட்டாமல் சுத்தமாய்த் துடைத்தெடுத்தீர்கள்.

○ 'மருதநாட்டு இளவரசி'யின் ஒப்பந்தப் பத்திரத்தின் உச்சியில் முருகன் துணை என்றுதான் எழுதியிருக்கிறீர்கள். (முருகன் அவர்கள் தமிழ்க் கடவுள் என்று கருதப்படுகிறவர் என்பது கவனிக்கத்தக்கது)

○ நீங்கள் முதன்முதலாய் இயக்கித் தயாரித்த நாடோடி மன்னனில் தொடக்கப் பாடலாக 'செந்தமிழே வணக்கம்' என்றுதான் ஆரம்பித்தீர்கள்.

இப்படி.... இப்படியெல்லாம்




அந்நியத் தோலை உரித்து உரித்துத் தமிழ்த்தோல் தரித்துக் கொண்டீர்கள்.

உங்களைப்பற்றி என் செவிகள் சேகரித்திருக்கும் செய்திகள் ருசியானவை.

ஒரு பாடகர் ஒரு மேடையில் உங்கள் பழைய பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கிறார். இரண்டு மணி நேரம் கரைந்துபோன நீங்கள், இப்போது என் கைவசத்தில் இருப்பது இதுமட்டும்தான் என்று உங்கள் விலையுயர்ந்த கைக் கடிகாரத்தைக் கழற்றி அந்தப் பாடகருக்குப் பரிசளிக்கிறீர்கள்; அது உங்கள் ஈகைக்குச் சாட்சி.

○ நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இறந்துபோன உங்கள் இரண்டாவது மனைவியின் இல்லம் சென்றபோது படுக்கையறையின் கட்டிலைப் பார்த்துக் குலுங்கிக் குலுங்கி அழுதிருக்கிறீர்கள்; அது உங்கள் ஈரத்திற்குச் சாட்சி.

○ தி.மு.க. மாநாடுகளில் மாநாடு முடிந்ததும் பந்தலுக்கடியிலேயே படுத்துக்கிடக்கும் வெளியூர் மக்களுக்கு அவர்களே அறியாமல் அதிகாலைச் சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்துவிட்டுப் போவீர்களே! அது உங்கள் மனிதாபிமானத்துக்குச் சாட்சி.

○ பொதுக்கூட்டங்கள் முடித்துவிட்டு நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு வைகை அணைக்கு வந்து பொன்னாங்கண்ணிக் கீரை இருந்தால்தான் சாப்பிடுவேன் என்று நீங்கள் நிபந்தனை விதிக்க, ஆளுக்கொரு திசையில் அதிகாரிகள் பறக்க, பொன்னாங்கண்ணிக் கீரை தயாராகும் வரை சாப்பிடாமல் இருந்தீர்களாமே! அது உங்கள் உறுதிக்குச் சாட்சி.

○ தொலைபேசி இணைப்பகத்திலிருந்த உங்கள் ரசிகர் ஒருவர் உங்கள் குரல் கேட்க ஆசைப்பட்டு இரவு பதினொரு மணிக்கு உங்கள் வீட்டுத் தொலைபேசி சுழற்றப்படுகிற சத்தம் கேட்டு ஆசையாய் எடுத்துக் கேட்க டொக் என்ற அந்தச் சின்ன சத்தத்திலேயே தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுகிறது என்பதை உணர்ந்து கொண்டு யாராயிருந்தாலும் தயவுசெய்து ஃபோனை வையுங்க என்று உடனே உத்தரவிட்டீர்களாமே! அது உங்கள் கூர்மைக்குச் சாட்சி.

○ வெளிநாட்டில் கொடுத்த பணத்தை பி.சுசீலா தமிழ்நாட்டில் திருப்பித் தர வந்தபோது ஏன் என்னுடைய உறவை முறித்துக் கொள்ளப் பார்க்கிறீர்களா? என்று உரிமையோடு மறுத்துவிட்டீர்களாமே! அது உங்கள் பெருந்தன்மைக்குச் சாட்சி.

(தொடரும்)

-வைரமுத்து-

# உங்கள் பிறந்த எண் 04 இல் கூட்டெண் 09 இன் பலன்கள்



28

### தோற்றம்

ராகுவுடன் செவ்வாய் இணைந்த ஆதிக்கப் பலனைத் தருவது. சற்று பூசினாற்போல சராசரி உயரத்துடன் இருப்பர். சிறிது சிவப்பாக இருப்பர். விழிகள் சிவந்து காணும். கனத்த குரல் இருக்கும். உஷ்ணத்தால் முடி குறைவாகிக் கொண்டுவரும்.

நீளமான எடுப்பான மூக்கும், தடித்த உதடுகளுடன் பெரிய வாயும் இருக்கும். பற்கள் நன்கு இருக்கும். கோபமுள்ள சண்டைக்காரர் என்பது உடனே பார்வையில் புரியும். சுமாரான நெற்றியும் சிறிய மண்டையும் நீண்ட முகமும் இருக்கும். கை, கால்கள் நீண்டிருக்கும். மிரள வைக்கும் தோற்றம் உள்ளவர்.

### குணம்

முரடராக இருப்பர். எவரிடமும் ஏமாற மாட்டார். நல்லவர். படிப்பைவிட விளையாட்டு, வீர கலையில் நாட்டம் கொள்ளுவார். தந்திரமும், உலக விவரமும் அறிந்தவர். நன்றாகப் பேசுவர். எதிலும் ஆழ்ந்த கவனம் செலுத்துகிறவர். தாழ்ந்து விடாமல் சரிக்குச் சரியாகப் பேசுபவர்.

எதையும் எதிர்த்துப் போராடுவர். கீழே விழுவதோ. அடிபட்டுக் கொள்வதோ இவருக்கு நடக்கும். வம்பும், சில வேண்டாத சகவாசமும் உண்டாயிருக்கும்.

இவர் நடத்தையும் பேச்சும் பிறருக்கு அச்சம் தரும். இவருடைய முன்னேற்றம், நடத்தை கண்டு பொறாமை கொள்ளும் மனிதர் இவரைக் கொலை செய்யக் கூடிய பகைவர் ஆவர். இவர்கள் அபாரத் திறமை கொண்ட சாமர்த்தியசாலிகளானதால் எத்தகைய சோதனைகளிலும் வெல்லுவர். மற்றவர்களை அளந்து வைத்து ஏற்பப் பழகுவர்.

தீய சகவாசத்தால் சில்லறைத் தப்புகள் செய்வர். பிறரிடம் தோற்க விரும்பார். பழி வாங்குவர். ஆனாலும் பொதுக் காரியங்களில் ஈடுபட்டுப் பிறருக்கு உதவுவார். பார்ப்பதற்கு அமைதியாகவே இருப்பர். மிகவும் தூண்டப்பட்டால் பொங்கி எழுந்து பெரும் ஆர்ப்பாட்டம் செய்துவிடுவர்.

வாழ்க்கையில் முற்பகுதி விளையாட்டும் பொறுப்பில்லாமலும் ஆகப்போகும். பிற்பகுதி பொறுப்போடு குறிப்பிட்டவற்றைச் சாதிப்பதாக இருக்கும். போட்டிகளில் கலந்து கொண்டால் நிச்சயம் வெற்றி பெறுவார்.

இவர்கள் வாழ்க்கை மாறுதல்களைக்கொண்டது. நினைத்து விட்டால் செய்து முடிக்காமல் விடமாட்டார். பிறந்த இடம் விட்டுப் பிற இடம் சென்று [illegible] புகழும் பெறுவார்.

### குடும்பம்

முன்னேறும் ஆர்வம் இருக்கும். உலக சுக வாழ்க்கையில் எதையும் விடாமல் அனுபவிக்க நினைப்பர். காதலித்து வருவர். எதிர்பார்த்தது நடக்காது. காதல் மனைவியானாலும்கூட இவரிடம் துன்பமே அடைவர். அநேகம் பேருக்கு ஒரு மனைவியுடன் நிற்பதில்லை. பிறக்கும் பிள்ளைகளிடமும் இவர் தகராறு செய்வார்.

சண்டைக்காரராகப் படுவாராதலால் பிறர் இவரிடம் சுலபமாக சுதந்திரமாகப் பழக மாட்டார். இதனால் விசுவாசமில்லாதவரே இவரை இலாபத்திற்காக மட்டும் சேர்ந்திருப்பார். மற்றபடி தனிமையே இவருக்கு. பொது வாழ்க்கையில் பல பின்பற்றுபவர் வருவர். காதல் தீவிரம் கூடாது. குடும்பவாழ்க்கையில் மிகவும் தொல்லை அனுபவிப்பர்.

### தொழில்

சர்க்கஸ், கட்டட வேலைகள், பொலிஸ், இராணுவம், அச்சு இயந்திர வண்டி, மோட்டார் தொழிற்சாலை தொடர்பானவற்றில் பணி புரிவர். உளவாளிகளாக, நிருபர்களாக, தீவிரவாதிகளாகவும் இருப்பர். பெண்கள், பெண் பொலிஸாக, நர்சாக இருப்பர். சிலர் வக்கீல்களாவர். அரசியலிலும், அரசாங்க உயர் [illegible]லும், ஆன்மிகத் துறையிலும், பத்திரிகையிலும் பணியாற்றுவர். ரியல் எஸ்டேட் காரர்களாக, புரோக்கர்களாக, சிவில் இன்ஜீனியர்களாக வருவர். தாவரப் பண்ணை, கால்நடைப் பண்ணை முதலியவையும் நடத்துவர். பண வசதி பெற்று விடுவர்.

### நோய்

வெப்பம் தொடர்பானவை, வயிற்றுக் கோளாறுகள் உண்டு. அறுவை சிகிச்சை நடக்கும். சிறு வயதிலேயே விபத்துக்கள் நடக்கலாம். கீழே விழுந்து அடிபடலாம். நரம்பு நடுக்கம் வரலாம். தீ, இடி, மின்னல், நஞ்சுத் தொல்லைகள் நேரலாம். அரசுத் தண்டணைக்கு ஆளாகலாம். எண்ணெய் தொடர்பான அலுவலகங்களில் பணி செய்வர்.

(தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான வாழ்க்கை விருத்தி செயற்றிட்டங்கள்: நடைமுறைகளும் சில வழிகாட்டல்களும்



ஆ. நித்திலவர்ணன்
விரிவுரையாளர் கல்வியியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**வெற்றிகரமான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த என்ன செய்ய வேண்டும்?**

1.திட்டமிடல்
2.செயற்றிட்ட முன்மொழிவையும், களவேலைப் புத்தகத்தையும்தயார்செய்தல்
3.செயற்றிட்டத்தை மேற்கொள்வ தற்கான அனுமதியை பாடசாலை செயற்றிட்டக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளல்
4.செயற்றிட்டத்தை ஆரம்பித்தல்
5.ஆய்வின் சகல விடயங்களையும் குறிப்பேட்டில் குறித்தல்
6.செயற்றிட்ட அறிக்கை எழுத ஆரம்பித்தல்
7.தரவு சேகரித்தல்
8.தரவுப்பகுப்பாய்வு செய்தல்
9.துறைசார் நிபுணர்களின் உதவி பெறுதல்
10.மாநாடுகள், கருத்தரங்குகள், போட்டிகளில் கலந்து கொள்ளல்
11.ஏனையவர்களைச் சந்தித்து ஆலோசனை கேட்டல்
12.முடிவுத்திகதிக்கு முன்னராக செயற்றிட்டத்தை நிறைவு செய்தல்

**செயற்றிட்டத்துடன் CD/ DVD இணைக்கலாமா?**

இணைக்கலாம். ஆனால் செயற்றிட்டத்தை மதிப்பிடுபவர், இதனை ஒரு வேலைச் சுமையாகக் கருதவும் இடமுண்டு.

இவற்றை பாதுகாப்பான உறையில் இட்டு செயற்றிட்ட அறிக்கையுடன்இணைக்கலாம்.

உயர் பெறுமதியுள்ள பொருட்களை செயற்றிட்ட அறிக்கையுடன் இணைக்க வேண்டாம்.

ஏனெனில் செயற்றிட்ட அறிக்கை மீள ஒப்படைக்கப்பட மாட்டாது. கடிதங்கள், குறிப்புக்கள், ஞாபகமூட்டல்கள், நிகழ்ச்சிநிரல், சான்றிதழ் பிரதிகள், பத்திரிகை நறுக்குகள், விளம்பரங்கள், இணையத் தளப் பக்கங்கள், படங்கள், புகைப் படங்கள், வரைபுகள், சிற்றேடுகள் மற்றும் வேலைப்பாட்டு மாதிரிகள் என்பனவற்றையும்நீங்கள்பின்னிணைப்பாக செயற்றிட்ட அறிக்கை யுடன் இணைக்கலாம்.

**செயற்றிட்ட அறிக்கையில் விடயங்கள் இடம் பெற வேண்டிய ஒழுங்கு யாது?**

1.செயற்றிட்டத்தலைப்பு, செயற்றிட்டத்தை செய்தவர் பெயர், பாடசாலையின் பெயர்
2.பொருளடக்கம்
3.செயற்றிட்ட சுருக்கம்
4.செயற்றிட்டத்துக்கான அறிமுகம்
5.செயற்றிட்டப் பயனாளிகள




6.செயற்றிட்டத்துக்காக பயன்படுத்தப்பட்ட வளங்கள்
7.பயன்படுததப்பட்ட முறையியல்
8.படிமுறைகள்
9.தரவுப்பகுப்பாய்வும்முடிவுகளும்
10.கலந்துரையாடலும்பெறுபேறுகளும்
11.நன்றிநவிலல்
12.உசாத்துணை நூல்கள்
13.பின்னிணைப்புக்கள்

**செயற்றிட்டத்துக்கு எவ்வாறு புள்ளியிடப்படுகின்றது?**

செயற்றிட்டத்துக்கு புள்ளியிடும் போது பின்வரும் விடயதானங்கள் கவ்னத்தில் கொள்ளப்படும்.

1. செயற்றிட்டத் தெரிவு:
♦செயற்றிட்டத் தலைப்பு,
♦ செயற்றிட்ட நோக்கங்கள்

2. திட்டமிடல்:
♦ முதனிலைத்தரவு மூலஙகள்
♦ தரவு சேகரிப்பும் தரவுப்பகுப் பாய்வும்

3. காலஅட்டவணைக்கேற்ப செய்யப்பட்ட வேலைகள்
♦ கள வேலைப் புத்தகப்பராமரிப்பும் வேலைகளின கோவைப்படுத்தலும்
♦ குழு வேலை
♦அறிவுறுத்தல் களைப் பெற்றுக்கொள்ளலும் அவற்றைப் பின்பற்றலும்

4.செயற்றிட்டப்பிரச்சினை மற்றும்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால முன் மொழிவுகளை முன்வைத்தல்

5. இறுதி செயற்றிட்ட அறிக்கை மதிப்பீடு

(முற்றும)

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

# சர்வதேச விசாரணைக்கு அனுமதிக்கக் கூடாது என்பதே மக்களின் தெளிவான நிலைப்பாடு

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



**(கொழும்பு) இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைக்கு அனுமதி வழங்குவதில்லையென்பதே பாராளுமன்றத்தினதும் நாட்டுமக்களினதும் நிலைப்பாடு.இந்த நிலைப்பாடு தொடர்பில் அச்சுறுத்தும் அதிகாரம் எவருக்கும் இல்லை என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

அதேநேரம் எதிர்ப்பு அரசியல் நடத்தி வரும் எதிர்க்கட்சி பேருவளை மற்றும் அளுத்கம சம்பவங்களை ஒரு பொழுது போக்காக எடுத்துக்கொண்டு அரசாங்கத்தின் மீது தாக்குதல் நடத்தி வருவதாக அவர் கூறினார்.

இராஜகிரியவிலுள்ள அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், ஐ.நா. மனிதவுரிமை ஆணைக் குழுவின் விசாரணைக்குழு உறுப்பினர் முன்வைத்திருக்கும் கருத்துத் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்தப்படக்கூடாது என்பதே அரசாங்கத்தின், பாராளுமன்றத்தின் இந்த நாட்டு மக்களின் தெளிவான நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை.

இவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுப்பதற்கான உரிமை எமக்கு உள்ளது. அவ்வாறு தீர்மானம் எடுக்கக்கூடாது என்று அச்சுறுத்தும் அதிகாரம் எவருக்கும் இல்லை.

தென்னாபிரிக்க குழுவினர் அரசாங்கத்தின் அழைப்பை ஏற்றே இலங்கை வருகின்றனர்.

இவர்களின் வருகை சிறந்த பலனைத் தரும் என்ற எதிர்பார்ப்பிலேயே நான் உள்ளேன்.

அளுத்கம, பேருவளை சம்பவங்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டதாக எதிர்க்கட்சி குற்றஞ் சுமத்துகிறதே, இதுதொடர்பாக உங்களின் நிலைப்பாடு என்னவென ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் வாசுதேவ நர்ணயக்கார,

எதிர்ப்பு அரசியல் கொள்கையைக் கொண்ட எதிர்க்கட்சியினர் இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் மீது தாக்குதல் நடத்த முயற்சிக்கின்றனர்.

இச்சம் பவங்களை ஆயுதமாகப் பயன்படுத்தி தமது பொழுது போக்குக்காக அரசாங்கம் மீது தாக்குதல் நடத்தி வருகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது.


இந்தச் சம்பவத்தை விட மிகவும் மோசமான இனவாத சம்பவங்களை அவர்கள் தோற்றுவித்தவர்கள், இந்த நிலையில் பேருவளை, அளுத்கம சம்பவங்கள் குறித்து கதைப்பவர்கள் தமது கைகள் எவ்வளவு சுத்தமானது என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தைத் தடுப்பதற்கு அப்போது ஆட்சியிலிருந்த ஐ.தே.க. அரசாங்கம் தவறிவிட்டது என்பதை அக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஏற்றுக் கொண்டுள்ளாரே என்றும் அமைச்சரிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

பல வருடங்கள் கடந்த நிலையிலாவது, அதனை ரணில் விக்ரமசிங்க ஏற்றுக்கொண்டிருப்பது நல்லவிடயம்.

இனவாதத்தைத் தூண்டி அதனை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்த வேண்டும் என்ற தேவை ஐ.தே.க. தலைமைக்கும் அப்போதைய ஐ.தே.க. அரசாங்கத்துக்கும் இருந்தது.

அக்கட்சியின் ஒரு சிலருக்கும் அப்போதைய குழப்ப சூழ்நிலைக்கும் தொடர்பு இருந்தது என்பதையும் அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார். (2)



புதிய கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா நேற்று முன்தினம் தனது கடமைகளை பொறுப்பேற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த கல்வி மட்டத்திற்கு திறனற்ற கல்விமுறைமை காரணம்

## உலக வங்கி ஆய்வில் தகவல்

(கொழும்பு)

திறனற்ற கல்விமுறைமையே தெற்காசியாவின் இளைய சமுதாயத்தினர் குறைந்த கல்வி மட்டத்தில் இருப்பதற்கும் பொருளாதாரத்தில் குன்றியுள்ளமையுக்குமான காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

உலக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றிலேயே இந்த விடயம் வெளியாகியுள்ளதாக செய்தித்தளம் ஒன்று தெரிவிக்கின்றது.

எனவே தெற்காசியாவிலுள்ள அரசாங்கங்கள், தமது பாடசாலைகளில் திறன்வாய்ந்த கல்வி முறையை உறுதிசெய்யவேண்டும் என்று உலக வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்காக பாடசாலைகளின் செயற்திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் உலக வங்கி கேட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு சென்று வெறுமனே நேரத்தை செலவழிப்பது போதாது. இது சிறந்த கல்விக்கற்றலை ஏற்படுத்தாது என்று உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய உதவி தலைவர் பிலிப் லெ ஹூரோயு தெரிவித்துள்ளார்.

கல்வி முறையின் செயற்திறன், தெற்காசியாவின் பொருளாதார வளர்ச்சியையும் பிராந்தியத்தின் முதலீடுகளையும் அதிகரிக்கும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை உட்பட்ட இந்தியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் 2015 ஆம் ஆண்டுக்கான கல்வி வளர்ச்சிக்காக அதிக பணத்தை முதலிட்டுள்ளன.

இந்த முதலீடுகள் காரணமாக தெற்காசியாவில் ஆரம்ப பாடசாலைகளின் வீதம் 75 முதல் 89வீதம் வரை அதிகரித்துள்ளது.

எனினும் இது லத்தீன் அமெரிக்காவில் 94 வீதமாகவும் கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக்கில் 95 வீதமாகவும் உள்ளதாக உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையை பொறுத்தவரை சர்வதேச தரத்தில் ஆரம்ப பாடசாலை திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

எனினும் இந்த விடயத்தில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் பின்னிலை வகிக்கின்றன.

இந் நிலையில் தெற்காசியாவில் மாணவர்கள் கல்விப்பயிற்சிகளில் ஈடுபடுத்தப்படுவது குறைவாகவுள்ளது.

இதன் காரணமாக ஆரம்பபாடசாலைகளில் இருந்து வெளியேறும் மாணவர்கள் குறைந்த திறன்களுடனேயே வெளியேறுகின்றனர்.

எனவே இவற்றை தவிர்ப்பதற்கு சிறுவர்களின் போசாக்கு தன்மையை அதிகரிக்க வேண்டும், ஆசிரியைகளின் திறன்களை உயர்த்த வேண்டும், நிதியளிப்புகளை அதிகரிக்க வேண்டும், கல்வியில் தனியாருக்கு அதிக இடம் வழங்கப்பட வேண்டும். மாணவர்களின் முன்னேற்றங்களை அளவீடு செய்யவேண்டும் போன்ற பரிந்துரைகளை உலக வங்கி முன்வைத்துள்ளது. (2)

# சமூக ஒருமைப்பாட்டு வாரம் நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படும்

## முதல்நாள் நிகழ்வு பொலனறுவையில் ஆரம்பம்

சமூக ஒருமைப்பாட்டு வாரம் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நாடளாவியரீதியில நடத்தப்படவுள்ளது.

சமூக ஒருமைப்பாட்டினூடாக தேசிய ஐக்கியம் என்ற தொனிப் பொருளில் இவ்வருடம் சமூக ஒருமைப்பாட்டு வார நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவிருப்பதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு முதல் தேசிய ஒருமைப்பாட்டு வார நிகழ்வுகள் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2014ஆம் ஆண்டு சமூக ஒருமைப்பாட்டு வாரத்தின் முக்கிய அம்சங்களாக வடமாகாணத்தில் கிளிநொச்சியிலும், சப்ரகமுவ மாகாணத்தில் குருவிட்ட பிரதேசத்திலும் அமைச்சின் மத்திய நிலையங்கள் இரண்டு அமைக்கப்படவுள்ளன.

ஒருமைப்பாட்டு வார நிகழ்வுகள் எதிர்வரும் 14ஆம் திகதி பொலனறுவைக்கான ஆய்வு சுற்றுலாவுடன் ஆரம்பமாகின்றது. மறுநாள் கிளிநொச்சியில் மத்திய நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

சமூகத்தில் ஒதுக்கப்பட்ட மக்களை பொதுவிடயங்களில் உள்ளடக்கி சகலரையும் ஒரு மட்டத்திற்குக் கொண்டுவரும் நோக்கிலேயே சமூக ஒருமைப்பாட்டுவேலைத் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார்.

கணவனை இழந்த பெண்கள், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறாத மாணவர்கள் என பல்வேறு தரப்பினர் பல மட்டங்களில் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகின்றனர்.

இவ்வாறான விடயங்களைத் தடுப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகவுள்ளது. ஒருமைப்பாட்டு வாரத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவிருக்கும் வசதியற்ற மாணவர்களுக்கு செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

இவற்றின் ஊடாக சமூகத்திலிருந்து அவர்கள் ஒதுக்கப்படுவதைத் தடுக்கமுடியும். அதுமட்டுமன்றி 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் விதமாக மொழிச் சங்கங்கள் மூலம் சமூக ஒருமைப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு மொழிச் சங்கத்திற்கும் அமைச்சின் ஊடாக 15 இலட்சம்ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் மன்னார் ஆகிய மாவட்டங்களின் கடற்கரையோரத்தை மையப்படுத்தி பட்டம் விடும் போட்டிகளும் இவ்வருடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தேசிய ஒருமைப்பாட்டு வாரத்தின் இறுதி நாளான 21ஆம் திகதி சமூக ஒருமைப்பாட்டு தேசிய மாநாடு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (2)

# புகலிடக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்புகின்றமை இரக்கமற்ற செயல்

## அவுஸ்.கிறீன்கட்சி குற்றச்சாட்டு

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின நடவடிக்கைகள் அதிர்ச்சியளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அந் நாட்டு கிறீன் கட்சி அறிவித்துள்ளது.

கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அருகாமையிலான கடற்பரப்பில் நிர்க்கதியான நிலையில் இருந்த இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்பி வைக்கின்றமை மனிதாபிமானமற்ற செயல் என கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை மீளவும் இலங்கைக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கை இரக்கமற்ற செயலாகும் என தெரிவித்துள்ளது.

குற்றவாளிகளினால் பாதிக்கப்பட்டவர்களை குற்றவாளிகளிடமே ஒப்படைத்தமைக்கு நிகரான காரியத்தை அரசாங்கம் செய்யமுயற்சிததுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

நாட்டின் மனிதவுரிமை குறித்த நற்பெயருக்கு இந்த நடவடிக்கை களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்பி வைக்கும் நடவடிக்கையானது ஐக்கிய நாடுகள் பிரகடனத்தை மீறும் செயலாகும் என தெரிவித்துள்ளது. (2)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மட்டுவில்-அத்தாய் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரையுள்ள சுபநேரத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கமைய அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும். (2)




## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று ஆறாம் திருவிழா

### திருவாய் மலர்வாய்

கடலலைகள் கரை தடவி நின்று
கானல் வரிபாடிப்பரவி ஏத்தும்
நயினைப் பதிவாழும் நாயகியே
நாள் மலரிட்டு நஞ்சுடை நாகங்கள்
நாடித் தொழுகின்ற நாகபூஷணியே
நீண்ட மதிற்சுவரும் நெடிய கோபுரமும்
கொண்ட கோயில் கொள்கையினால் அமரும்
பண்டுகோமுகியின் அட்சய பாத்திரமோ
தொண்டர் பசிதீர அன்னம் பாலிக்கும்
கண்ட பிணிக்கு கருணை விழிகாட்டும்
கற்பகமே நற்றாயே அற்புதமே
வற்றல் மரமாக வாழும் தமிழ் சாதி
அற்ற பெருமைகள் பெற்று உய்வாரோ
சற்றே மலர திருவாய் நோகுமோ

சு.சிவராசா (நாவற்குழி)

### நயினையின் நாகதீபமே

நயினையில் வீற்றிருக்கும் பக்தியின் திருவுருவமே
நலம் காக்கும் நயினை நாகபூஷணித்தாயே
உன்னைத் தேடிவருபவர்களுக்கு
அருள் பொழியும் அமுத சுரபியே!

அமுதத்தை சுரக்கும் அமுதக் கடல் போல் நீயும்
அருளை வழங்கும் அமுதக் கடலே
உன்னைப் போற்றும் அடியார்களின்
குறைகள் தீர்ப்பவளே! தாயே என் குறையையும் தீருமம்மா!

ம.மதுசாளினி (யா/உரும்பிராய் சை.த.வி.தரம் 10 B )

### நயினை நாகபூஷணி தாயே

நயினையிலே கோயில் கொண்டாய்
நாகபூஷணி-அம்மா நாகபூஷணி
நயினைக் கடல் மீதிருக்கும் நாகபூஷணி
நாகதீபம் மீதிருக்கும் நாகபூஷணி
நயினையிலே ஆட்சி செய்யும் நாகபூஷணி
நாகம் மீது எழுந்தருளும் - நாகபூஷணி
பக்தர்களைக் காற்றிடும் -தாயே பூஷணி

பா.டிலக்ஷன் (யா/செ.இ.கல்லூரி)

### வரம் தரும் நாகபூஷணி

அலைகடலின் ஓசையிலே
அரவத்தில் அமர்ந்திருந்து
அருளாட்சி புரிந்து வரும்
அன்னை தேவியே!
இன மத பேதமின்றி
தவித்து நிற்கும்
அடியவர்களைக் காத்து வரும்
அன்னையே!
இடம் பெயர்ந்து வாழும்
எங்களையும் காத்திட
வரமாட்டாயா?

க.மலர் (இடைக்காடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவியவர்களையே நட்டாற்றில் விட்டுவிட்டது அமெரிக்க அரசு

அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் எம்.நிக்சன் ஹென்றி ஏ.கிஸ்ஸிங்கரின் காதில் இப்படிக் கிசுகிசுத்தார்: நாம் இதைப் பற்றியெல்லாம் உணர்ச்சிவசப்பட்டுக்கொண்டிருக்க வேண்டாம். என்ன செய்தாலும் தெற்கு வியட்நாம் தேறவே போவதில்லை என்பதே அவருடைய கிசுகிசுப்புக்குப் பொருள். அது 1972 ஒகஸ்ட் மாதம். அமெரிக்கப் படைகள் வெளியேறிய பிறகு, தெற்கு வியட்நாம் நொறுங்கிவிடும் என்பதே நிக்ஸனின் கவலை. இன்னும் ஓரிரு ஆண்டுகளுக்கு இந்த நாடு எப்படியாவது தாக்குப்பிடிக்கும் வழியை நாம் கண்டாக வேண்டும். வரும் ஒக்டோபருக்குள் நாம் அதைச் செய்துவிட்டால் 1974 ஜனவரிக்குப் பிறகு யாரும் இதை எதுவும் செய்துவிட முடியாது என்று ஆமோதித்தார் கிஸ்ஸிங்கர்.

இந்த உத்தியைத்தான் -கௌரவமான இடைவேளை என்று அழைத்தார்கள். ஒருநாட்டில் நுழைந்து சண்டையிட்டு (பலமாக அடிவாங்கி) வெளியேறிய பிறகு, போரிட்டகளைப்பிலிருந்து, போரிட்ட சம்பவத்தையே மறந்துவிடும் வரையிலான காலத்துக்கு இடைப்பட்ட நாட்களே இந்தக் கௌரவமான இடைவேளையாகக் கருதப்படுகிறது. 32 மாதங்களுக்குப் பிறகு தெற்கு வியட்நாமின் சைகோன் வீழ்ந்தபோது, மீண்டும் அமெரிக்க இராணுவம் அங்கே செல்ல வேண்டும் என்று நினைத்த அமெரிக்கர்கள் யாரும் இல்லை. மறுபடியும் நம்மை வியட்நாமில் இழுத்துவிடுவார்களோ என்று அஞ்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகரித்து வந்த வியட்நாமிய அகதிகள் பிரச்சினை குறித்து வாய் திறக்கக்கூட அஞ்சினார்கள்.

**ஈராக் என்றாலே பாராமுகம்**

கௌரவமான இடைவேளையின் நிழலிலிருந்து தப்புவதுகூட இந்நாளில் கடினமாகிவிட்டது. ஈராக்கில் அமெரிக்கா நுழைந்தபோது மொழிபெயர்ப்பாளர்களாகவும் ஓட்டுநர்களாகவும் வழிகாட்டிகளாகவும் ஆலோசகர்களாகவும் செயற்பட்ட ஈராக்கிய நண்பர்களின் பாதுகாப்பு இப்போது கேள்விக்குறியாகிவிட்டது. கொலை வெறியோடு வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். படைகளிடமிருந்து இவர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை அமெரிக்காவுக்கு இருக்கிறது. இதற்காக லிஸ்ட் புரெஜெக்ட் என்ற அமைப்புக்கு நான் தலைவராக இருக்கிறேன். இவர்களுக்கெல்லாம் விசா வழங்கி அமெரிக்காவுக்கு வரவழைத்துப் பாதுகாப்பான புகலிடங்களைக் கொடுங்கள், அதற்கொரு திட்டம் தீட்டுங்கள் என்று ஒபாமா நிர்வாகத்திடம் தொடர்ந்து கெஞ்சிக் கொண்டிருக்கிறேன்.

ஆனால், இந்த வெள்ளை மாளிகை நிர்வாகம். ஈராக் என்றாலே விட்டேற்றியாக ஒதுங்கி நிற்கிறது. 2008 தேர்தல் பிரசாரத்தின்போது ஈராக்கிலிருந்து அமெரிக்கத் துருப்புகள் விலக வேண்டும் என்று ஒபாமா பிரசாரம் செய்தார். 2012 இல் ஆட்சிக்கு வந்ததும் படைகளைத் திரும்பப் பெற்றார். முன்பைவிட ஈராக் இப்போது நன்றாக இருக்கிறது என்று இவர்கள் தாங்களாகவே நம்பிவிட்டனர். ஈராக்கில் இப்போது நிலைமை நன்றாக இல்லை என்றாலும்கூட அமெரிக்க மக்கள் ஈராக்குக்காகப் பரிந்துபேச மாட்டார்கள் என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டு இப்போது பாராமுகமாக இருக்கிறார்கள்.

அமெரிக்காவுக்கு உதவிய ஈராக்கியர்களை அமெரிக்காவுக்கு அழைத்துவந்து பாதுகாப்பாகத் தங்கவைக்க சிறப்புப் பிரிவில் விசா வழங்க, நாடாளுமன்றத்தில் இரு கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் இணைந்து புதிய சட்டத்தையே இயற்றினார்கள். நாடாளுமன்றம் கொடுத்ததை அரசு நிர்வாகம் தடுத்துவிட்டது. அமெரிக்கப்படைகளுடன் சேர்ந்து செயற்பட்ட ஆயிரக்கணக்கான ஈராக்கிய மக்கள், ராஜீயத் தூதர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவன உறுப்பினர்கள் இப்போது நிர்க்கதியாக விடப்பட்டுவிட்டனர். தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விசாவுக்காக அவர்கள் தவியாகத் தவிக்கிறார்கள். இதே கதைதான் இப்போது ஆப்கானிஸ்தானிலும்!

**எதிர்பாராதது அல்ல**

இந்தப் பிரச்சினை சற்றும் எதிர்பாராதது அல்ல. ஈராக்கில் போர் முடிவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னாலேயே, நெருக்கடி ஏற்பட்டால் நமக்கு உதவியவர்களைப் பாதுகாப்பாக அழைத்து வரவும் அமெரிக்காவில் தங்கவைக்கவும் திட்டமொன்றைத் தீட்டுமாறு அரசின் நிர்வாகப் பிரிவுக்கு நாடாளுமன்றம் கட்டளை பிறப்பித்தது.

ஆனால், வெள்ளைமாளிகை அதை லட்சியமே செய்யவில்லை. 2011 டிசெம்பரில் அமெரிக்கப் படையின் கடைசிப் பிரிவு துருப்புகள் ஈராக்கிலிருந்து புறப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னால் தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் உறுப்பினர் ஒருவர் லிஸ்ட் புரெஜெக்ட் அமைப்பின் வழக்கறிஞர்களைப் பார்த்து, உங்களைச் சார்ந்த ஈராக்கியர்கள் நமக்கு என்ன ஆகுமோ என்று உள்ளூர அஞ்சுகிறார்கள். ஆனால், அப்படி அவர்கள் அஞ்சுவதற்கு உண்மையான காரணம் ஏதுமில்லை என்று கூறிவிட்டார்.

அமெரிக்கத் துருப்புகள் ஈராக்கை விட்டு வெளியேறிய இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு நடந்த உள்நாட்டுப் போர் காரணமாக சுமார் 15 லட்சம் ஈராக்கியர்கள் தங்களுடைய வீடுவாசலை இழந்து இப்போது வெளியேறியுள்ளனர்.

**90 பேரில் மிஞ்சியவர் எத்தனை பேர்?**

பாக்தாத், ஃப்லூஜா ஆகிய நகரங்களில் நான் பணி புரிந்துபோது என் கீழ் 90 ஈராக்கியர்கள் பணிபுரிந்தனர். அவர்களில் 85 பேரை ஈராக்கிலிருந்தே விரட்டிவிட்டனர். மூன்று பேரைப் படுகொலை செய்துவிட்டனர். மிஞ்சிய இரண்டு பேரில் ஒருவர், தன்னுடைய அடுக்கத்தில் மனைவி, ஐந்து வயது மகள், கால்ட் ரக கைத்துப்பாக்கியோடு வீட்டைவிட்டு வெளியே வராமல் முடங்கிக் கிடக்கிறார். ஐ.எஸ்.ஐ.எஸ். கண்ணில்பட்டால், கைத்துப்பாக்கியை வைத்துக்கொண்டு அவரால் உயிர் தப்பிவிட முடியாது. ஜலால் என்பவர், மனைவியுடனும் தன்னுடைய மூன்று மகள்களுடன் துருக்கிக்குத் தப்பி ஓடிவிட்டார். ஒருவகையில் அவர் அதிர்ஷ்டக்காரர். ஏனென்றால், ஜூலை 15 வரை பாக்தாதிலிருந்து புறப்படும் எல்லா விமானங்களிலும் இருக்கைகள் முன்பதிவு முடிந்துவிட்டது. என்னுடன் தொலைபேசியில் பேசியபோதே அவருடைய குரல் உடைந்திருந்தது. உங்களுடன் சேர்ந்ததால் என்னுடைய வாழ்க்கையே நாசமாகிவிட்டது என்று மிகுந்த வேதனையோடு கூறினார் ஜலால்.

எல்லாவற்றிலும் நம்பிக்கை இழந்துவிட்டேன்; என்னுடைய வீடு, கார், சொத்துக்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவந்துவிட்டேன். இனி, எத்தனை நாட்களுக்கு இப்படி ஓடிக்கொண்டிருக்க வேண்டும். ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் அல்லது காலம் முழுக்க? எனக்கு இப்போது 37 வயதாகிறது. கடந்த 10 ஆண்டுகளாக இந்த நாடகத்தில் நான் சிக்கிக் கொண்டிருக்கிறேன். எல்லாவற்றின் மீதும் வெறுப்பே ஏற்படுகிறது. என்னுடைய பெண்களை நான் படிக்க வைக்க வேண்டும், அவர்களுக்கு வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க வேண்டும்.

அவர்களுடைய எதிர்காலத்தையாவது உறுதிசெய்ய வேண்டும். எல்லாப் பெண் குழந்தைகளும் பீதியில் உறைந்திருக்கிறார்கள். சிறப்புக் குடியேற்ற விசா கோரி (அமெரிக்க) அரசுக்கு ஓராண்டுக்கு முன்னால் விண்ணப்பித்தேன்.

அதை நினைவூட்ட மின்னஞ்சல், மின்னஞ்சல், மின்னஞ்சல் என்று தொடர்ந்து அனுப்பிக் கொண்டேயிருக்கிறேன். கடைசியாக எனக்கு 2010 இல் நேர்காணல் நடத்தினார்கள். இப்போது 2014. நான்கு ஆண்டுகளாகவா உங்கள் நிர்வாகம் என்னுடைய மனுவைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது?

உங்களுக்கு உதவிகள் செய்த எங்களைக் குடும்பத்துடன் கடத்துகிறார்கள். சித்திரவதை செய்கிறார்கள். கொடூரமாகக் கொலை செய்கிறார்கள் என்று கதறியழுகிறார் ஜலால்.

எங்களிடம் எல்லா உதவிகளையும் வாங்கிக்கொண்டு வேலை முடிந்ததும் இங்கேயே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள் என்று அமெரிக்க நிர்வாகத்தைச் சாடினார். வியட்நாமிலும் இதேதான் நடந்தது.

**பரஸ்பரம் குற்றச்சாட்டு**




அமெரிக்க அரசியல் அரங்கில் பரஸ்பரம் குற்றஞ்சாட்டுவது ஆரம்பித்துவிட்டது. 10 ஆண்டுகளுக்கு முன்னால் யார் சொன்னது சரி, ஈராக் போரில் நாம் அடைந்தது வெற்றியா, தோல்வியா என்றெல்லாம் சூடாக விவாதம் நடக்கிறது. ஒரு காலத்தில் நமக்கு உதவியவர்களுக்கு இன்றைக்கு உதவி தேவைப்படுகிறது என்றபோது, அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். கௌரவமான இடைவேளை நேரமும் கடந்துவிட்டது. ஈராக் எக்கேடுகெட்டுப் போனால் நமக்கு என்ன என்று அமெரிக்கர்கள் நினைக்கிறார்கள்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தாக்குதல்கள் நடத்த வாய்ப்பில்லை



## பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றார்

(கொழும்பு)

**இலங்கையை மையமாக வைத்து இந்தியாவில் தீவிரவாத தாக்குதல்களை நடத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அந்நாட்டில் வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது,

இந்தியாவுக்கு எதிரான தாக்குதலை நடத்தும் திட்டத்துடன் இலங்கையில் முஸ்லிம் தீவிரவாதிகள் தங்கியிருக்க வாய்ப்புள்ளது என்று இந்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் என்னிடம் கூறினர்.

இதன் அடிப்படையில் நாங்கள் விசாரித்தபோது, அது உண்மையல்ல என்பது தெரிய வந்துள்ளது. அவர்கள் கூறியது போன்று எதுவும் நடக்க வாய்ப்பில்லை.

இதுபற்றி அவர்கள் கவலைப்படத் தேவையும் இல்லை என்றார்.

முன்னதாக, சில மாதங்களுக்கு முன்பு சென்னையில் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த தீவிரவாதியான ஜாகீர் உசேனிடம் தமிழகப் பொலிஸார் நடத்திய விசாரணையில், அவர் சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தையும், பெங்களூரில் உள்ள இஸ்ரேல் தூதரகத்தையும் தகர்க்க திட்டமிட்டது தெரிய வந்தது.

அவருக்கு கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரி மூலம் ஐஎஸ்ஐ அமைப்பு பயிற்சி அளித்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனிடையே ஜாகீர் உசேனின் கூட்டாளி முகமது ஹோசினியை மலேசியாவில் அந்நாட்டு பொலிஸார் கைது செய்தனர்.

அவருக்கும் இந்தச் சதியில் தொடர்பு இருப்பதை தமிழக பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இதைத் தொடர்ந்து, இந்தியாவில் உள்ள அந்நிய நாட்டுத் தூதரகங்களைக் குறிவைத்து இலங்கை, மாலதீவு, மலேசியா ஆகிய நாடுகளில் முஸ்லிம் தீவிரவாதிகள் செயற்படுவதாகக் கிடைத்த தகவலின்பேரில் இலங்கை அரசிடம் மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் விளக்கம் கேட்டனர். (2)

# புலித் தலைவர்கள் உயிரிழந்தமை குறித்தே முதலில் விசாரணை

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் உயிரிழந்தமை தொடர்பாகவே ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழு முதலில் விசாரணை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின 12 தலைவர்கள் உயிரிழந்தமை தொடர்பாக முதற்கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுளளன.

வெள்ளைக்கொடி சம்பவம் தொடர்பில் சாட்சியமளிக்க நான்கு பேர் ஜெனீவா சென்றுள்ளனர்.

இலங்கை தொடர்பில் விசாரணை நடத்தி ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் உறுப்பினரான யாஸ்மீன் சூகாவே இந்த சாட்சியாளர்களை முன்னிலைப்படுத்தவுள்ளார்.

இவர்கள் யார் என்பதனை வெளிப்படுத்தாத போதிலும் ஒருவர் இலங்கை ஊடகவியலாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் சாட்சியமளிக்க புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்களும் இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான ஏற்பாட்டாளர் எரிக் சொல்ஹெய்மும் முன்வந்துள்ளனர்.

புலித்தேவன், நடேசன் போன்ற விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (2)

# இராஜதந்திர சேவை அதிகாரியாக ஊடகவியலாளர் சிவராஜா நியமனம்

சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளரான ஆர்.சிவராஜா ஜேர்மனியில் இலங்கை இராஜதந்திர சேவை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது ஜனாதிபதியின் தமிழ் விவகாரங்கள் மற்றும் தமிழ் ஊடகங்களுக்கான இணைப்பாளராகப் பணியாற்றி வரும் இவர் ஜேர்மனின் தலைநகர் பேர்லினிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் ஊடக அதிகாரியாக தமது பணிகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இந்த நியமனத்துக்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

1996 ஆம் ஆண்டு ஊடகப் பயணத்தைத் தொடர்ந்த சிவராஜா இலங்கையின் தமிழ் பத்திரிகைகள் மற்றும் தனியார் தொலைக்காட்சி என்பவற்றில் ஊடகவியலாளராக பணிபுரிந்துள்ளார்.

பின்னர் கடந்த ஆண்டு ஜனாதிபதியின் தமிழ் விவகாரங்கள் மற்றும் தமிழ் ஊடகங்களுக்கான இணைப்பாளராக அவர் நியமிக்கப்பட்டார். (2)

# அளுத்கம வன்முறை தொடர்பாக ஜெனீவாவில் அறிக்கை சமர்ப்பிப்பு

## முஸ்லிம் கவுன்ஸில் கண்டனம்

(கொழும்பு)

அளுத்கம வன்முறைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம், ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் அளித்த விளக்கத்தை முஸ்லிம் கவுன்ஸில் கண்டித்துள்ளது.

இது தொடர்பில் முஸ்லிம் கவுன்ஸில், இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிசுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.

அதில் அளுத்கம வன்முறைபற்றி இலங்கையால் கூறப்பட்ட விடயங்கள் பிழையானவை என்று கவுன்ஸில் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கம் ஜெனீவாவில் வெளியிட்ட தகவல்படி ஜூன் மாதம் 15 ஆம் திகதி அளுத்கம வன்முறைகளை முஸ்லிம்களே ஆரம்பித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் சர்வதேசத்தில் இலங்கையின் முஸ்லிம்களுக்கு எதிரான போக்கு ஒன்றுக்கு வழி வகுக்கப்பட்டுள்ளதாக கவுன்ஸில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜெனீவாவுக்கான இலங்கையின் பிரதிபிரதிநிதி மனிஷா குணசேகர தமது அறிக்கை சமர்ப்பிக்கும் போது, இலங்கையின் பொலிஸ்மா அதிபரை போன்ற தோரணையில் அதனை சமர்ப்பித்துள்ளார்.

வன்முறைக்கான முதல் கல் முஸ்லிம் கிராமத்தில் இருந்தே வீசப்பட்டதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் வன்முறைக்கான காரணத்தை விரும்பினால் [illegible] முடியும் என்று கவுன்ஸில் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மூன்று இடையூறுகள்

ஒரு பெரியவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் சொன்னார். "இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி. ஒரு நல்லவன்– ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி. இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி" என்றார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இதற்கு என்ன விளக்கம்? என்றேன்.

அதன்பின் அவர் விளக்கம் கொடுத்தார்.

ஒரு ஒற்றையடி பாதையில் எதிரும் புதிருமாக இரண்டு பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் பாதையை விட்டு விலகாமல் நேராக வந்தால் மோதிக் கொள்ள வேண்டியது தான். எதிரும் புதிருமாக வந்து கொண்டிருக்கும் இவர்கள் இருவருமே நல்லவர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அவர் என்ன செய்வார்? இவர் நேராக பாதையில் வரட்டும் என்று அவர் வரப்பை விட்டு விலகி கீழே இறங்கி நடந்து வருவார்.

இவர் என்ன செய்வார்? அவர் பாதையில் வரட்டும் என்று கீழே இறங்கி நடந்து வருவார்.

அவருக்காக இவரும் இவருக்காக அவரும் விட்டுக் கொடுக்கிறார்கள். ஆக அவர் வரும் பாதையையொன்று. இவர் போகும் பாதையொன்று. நடுவில் ஏற்கன்வே உள்ள பாதையொன்று மொத்தம் மூன்று.

அது தான் இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி என்று சொல்வது.

ஒரு நல்லவன்– ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி. இது எப்படி என்றால்... ஒரே வரப்பில் எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேரில் ஒருவன் நல்லவன். ஒருவன் கெட்டவன்.

நல்லவன் வரப்பை விட்டு கீழே இறங்கி எதிரில் வருபவனுக்கு வழி விடுவான். கெட்டவன் வரப்பை விட்டு இறங்கவேமாட்டான். அவன் இறங்கட்டுமே. நாம் எதற்கு இறங்க வேண்டும் என்று இருந்து விடுவான். இப்பொழுது இரண்டு பாதைதான் உண்டு. இதுதான் ஒரு நல்லவன் – ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி என்று சொல்வது.

இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழியென்று சொல்வது எப்படித் தெரியுமா?

ஒரே வரப்பில் எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேருமே கெட்டவன் என்று வைத்துக் கெள்ளுங்கள். இரண்டு பேருமே வரப்பை விட்டு கீழே இறங்க மாட்டார்கள்.

இவன் இறங்கட்டுமே என்று அவனும் அவன் இறங்கட்டுமே என்று இவனும் இருப்பார்கள்.

இதுதான் கெட்டவனுக்கு ஒரே வழி என்று சொல்வது. இப்பொழுது தான் அந்த பெரியவர் சொன்ன வார்த்தைக்கு அர்த்தம் புரிந்தது. அவரே இன்னொரு விடயத்தையும் சொன்னார்.

அதாவது நமக்கு வரும் இடையூறுகள் மூன்று வகை என்றார். அது எப்படி என்று கேட்டேன். நாம் ஒரு காரியத்தை தொடங்குகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு மூன்று வகையில் இடைஞ்சல் வரலாமாம். நம்மால் வரும் இடைஞ்சல் ஒரு வகை. இது ஆத்யாத்மிகம். நம்மைத் தவிர மற்றவர்களால் வரும் இடைஞ்சல் ஒரு வகை–இது ஆதிபௌதிகம்.

இயற்கையாக வரும் இடைஞ்சல் மூன்றாவது ரகம். அதற்கு பெயர்–ஆதிதெய்வீகம்.

நமக்குப் பிடித்த ஒரு சினிமாப் படத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த நேரம் பார்த்துக் நமக்கு வயிறு வலிக்கிறது. இது நம்மிடம் இருந்தே வரும் இடைஞ்சல்.

ஆர்வமாக அந்தப் படத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அந்தச் சமயம் பார்த்து பக்கத்திலிருப்பவர்கள் சத்தம் போடுகிறார்கள். இது மற்றவர்களால் வரும் இடைஞ்சல்.

அந்த சமயம் பார்த்து இடி–மின்னல்–பூகம்பம்... கரன்ட் போய் விடுகிறது. இது இயற்கை உண்டு பண்ணும் இடைஞ்சல்.

இப்படி மூன்று வகையாகவும் இடைஞ்சல் வரக்கூடாது என்பதற்காகத்தான் பெரியவர்கள் சாந்தி–சாந்தி–சாந்தி என்று மூன்று தடவை சொல்கிறார்கள். இந்த மூன்று இடைஞ்சலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று அர்த்தம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 'பொதுபலசேனா'விற்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

*சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் (தமிழில் :- யோகர்)*



ஞானசாரதேரர்

ஆசிய ஆபிரிக்க கண்டங்களிற் பேரலவே ஏனைய கண்டங்களிலும் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி அதன்மூலம் மரணங்கள், அழிவுகள், அவலங்கள் மற்றும் தீரா வேதனைகளுக்கு கொடூர பயங்கர அழிவு சக்தியே இந்த மத - தீவிர வாத, இனவாத வன்செயல்களாகும்.

சீனாவின் வடகீழ் மாகாணமான ஷின்ஜியாங், ஆப்கானிஸ்தான் மற்றும் ஏனைய மத்திய ஆசிய பிராந்தியங்களூடாக மத்திய கிழக்கு உட்பட கென்யா, நைஜீரியா போன்ற ஆபிரிக்க நாடுகளிலுங்கூட அரசாங்கங்களின் ஸ்திரத்தன்மையை மோசமான முறையில் சீர்குலைத்துக்கொண்டிருப்பது இஸ்லாமிய தீவிரவாதமேயாகும்.

இன்று ஈராக்கை மற்றுமொரு உள்நாட்டு யுத்தத்தில் மூழ்கடித்து அச்சுறுத்தலுக்குள்ளாக்கிக் கொண்டிருப்பதும் மத தீவிரவாதமேயாகும்.

21 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய சாபக்கேடும் இந்த மத தீவிரவாதமேதான்.

எமது நாட்டின் சிறுபான்மை மதப் பிரிவினர்களான கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்கள், அதிகாரத் திணிப்புக்கள் மூலம் விரும்பத்தகாத ஒருவித சர்வதேச பார்வையை இலங்கையின் பால் ஈர்த்துக்கொண்டிருக்கும் பொதுபலசேனா (BBS) விழிப்புடன் இருக்கவேண்டும்.

அதாவது தமிழர்களுக்கெதிரான வன்செயல்களைத் தூண்டும் விதத்தில் முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் மேற் கொள்ளப்பட்ட அப்பட்டமான ஆத்திர மூட்டல் நடவடிக்கைகளின்போது பழி வாங்கல் நடவடிக்கைகளுக்கு இடங் கொடாமல் சிங்கள மக்கள் வெளிப்படையாகவே கடைப்பிடித்திருந்த பாரிய சகிப்புத்தன்மை இந்நேரத்தில் நினைவிற் கொள்ளப்படவேண்டும்.

1983 இல் பாதுகாப்பற்ற அப்பாவித் தமிழர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் சர்வதேச ரீதியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தது நியாயபூர்வமானதாயிருந்த போதிலும் சிங்களவர்களில் மிகப் பெரும்பான்மையினருக்கு இந்த விதமான காட்டு மிராண்டித் தனங்கள் மட்டில் ஏற்பட்ட அருவருப்புடன் கூடிய எதிர்ப்புணர்வும் அவர்களுள் சிலர் தம்மையொத்த தமிழ்ச்சகோதரர்களை காப்பாற்றும் பொருட்டு தமக்கான உயிராபத்தையும் கருதாது செயற்பட்டிருந்தமையுங்கூட பலராலும் கண்டுகொள்ளப்பட வில்லை.

அனுராதபுர திருத்தலத்திற்கு யாத் திரை மேற்கொண்டிருந்த பல்வேறு இடங்களை சேர்ந்த யாத்திரீகர்கள் புனித வெள்ளரசு மரத்தடியில் வைத்து ஏ.கே-47 துப்பாக்கியால் தீர்த்துக்கட்டப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இவ்வாறான ஆத்திர மூட்டும் நடவடிக்கைகள் சிங்களவர்களால் மௌனித்த வேதனைகளாக சகித்துக்கொள்ளப் பட்டமையுங்கூட நன்மைத் தனங்களேயாகும்.

எதிர்பார்க்கப்பட்ட பழி வாங்கல்கள் இடம்பெறாது போனதால் உண்மையான பயங்கரவாதிகள் யார்? என்பதை உலகம் கண்டுகொண்டது. எனவே, பதில் வன்செயலற்ற இந்த நன்மைத்தனத்தில் பயன் தீப்போன்ற தீக்குணம் படைத்த பொதுபல சேனாவிற்கு ஒரு நினைவுபடுத்தலாக அமையட்டும்.

உண்மையில் பொதுபலசேனா மேற்கொள்கின்ற இந்த முயற்சியானது கேலிக்கிடமானதும் முட்டாள் தன முமானதேயாகும். சிங்கள பெரும் பான்மையினரால் தேர்ந்தெடுக்கப் பட்ட பலம்வாய்ந்த அரசொன்று பெரும்பான்மை மக்களின் நலன் களை பாதுகாக்கும் அதிகாரத்தில் இருக்கிறது.



வன்முறையால் பாதிக்கப்பட்ட இடங்களை ஜனாதிபதி பார்வையிட்டார்

எந்தவொரு பல், இனமத வர்க்க சமூகங்களிலும் நிகழ்வது போன்ற சிறிய சிறிய முறுகல், முரண்பாடுகள் போன்றவை வெவ்வேறு மத - இன குழுக்களுக்கிடையில் ஏற்படக்கூடும்.

ஆனாலும் சமூகத் தலைவர்களிடையிலான கலந்துரையாடல்களினூடாக தீர்த்துக் கொள்ளக்கூடியதான சிறிய பிரச்சினைகளுக்கு பேய் ஓட்டுவது போன்ற நரவேட்டைகளில் இறங்குவதானது நீறு பூத்திருக்கும் இன - மத அடிப்படைவாதங்களை இனங்காட்டும் நடவடிக்கையாகவே அமையும்.

பொதுபலசேனாவின் குறிக்கோள் என்ன என்பது தெளிவானதாயில்லை. நாட்டுக்கும் மதத்திற்கும் அவர்களால் இழுக்கே ஏற்பட்டுள்ளது.

ஏனைய எந்தவொரு அமைப்பிற்கும் உள்ளது போலவே பொதுபலசேனாவிற்கும் அவர்களது இன மத நலன்கள் சார்பாக பேசுவதற்கான சுதந்திரம் நிச்சயமாக உள்ளது.

இஸ்லாமிய ஹலால் தகைமை எனும் விடயத்திற்கெதிராக அவர்களால் தொடர்ச்சியான பிரசாரமொன்று மேற்கொள்ளப்புட்டது . அப்பிரசாரம் நியாயப்படுத்தப்பட்டதோ இல்லையோ எப்படியிருந்தாலும் அது வெற்றிகரமாக அமைந்தது.

பௌத்த் கோவில் வளாக அமைவிடங்களாக அவர்களால் உரிமை பாராட்டப்படும். தற்போதைய முஸ்லிம் பள்ளிவாசல் அமைவிடங்களுக்கெதிராக அவர்களால் தொடர் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் கிறிஸ்தவ பாதிரிமார்களால் பௌத்தர்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாற்றப்படுவது மற்றும் அரச ஸ்தாபனங்களில் மேற்கொள்ளப்படும் வாஷக்ட்ரமி (**Vasectomy**) போன்ற குடும்பக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கும் எதிராக தமது எதிர்ப்பினை வெளியிட்டுமுள்ளனர்.

அவர்களது இந்தவித எதிர்ப்பு நடவடிக்கைகள், நடைமுறையிலிருக்கும் சட்டங்களுக்கு முரண்படுவதாக இல்லாததுடன் ஏதாவது முரண்பாடுகள் இருந்தாலும் அவை மட்டில் மேற்கொள்ளவேண்டிய தீர்மானமெதற்கும் நீதிமன்றத்தை அணுகமுடியும்.

எந்தவிதத்திலும் பொதுபலசேனாவின் முயற்சிகளனைத்தும் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவானதாகவும் சட்டம்- ஒழுங்குகளை மீறாதவையாகவும் இருத்தல் வேண்டும். புத்தர் நேரடியாகவே முன்வைத்த கர்ம வினை பயன் விதிகளுக்கு ஏற்பவே அவர்களது செயற்பாடுகள் இருக்கவேண்டுமென்பதே பௌத்த மக்களனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

இலங்கையில் பௌத்த தர்மத்தின் காவலர்கள் என்ற ஓர் வரலாற்றுக் கடப்பாடு தமக்கே இருப்பதான ஒரு நம்பிக்கை பௌத்த சங்கத்திற்கு இருக்கிறது.

பொலிஸ் பாதுகாப்பு வளையங்களை பலவந்தமாக உடைத்துக்கொண்டு அமைச்சுக்கள் மற்றும் மதஸ்தாபனங்களுக்குள்ளும் வலிந்து உட்புகாமல் ஞானம் பெற்ற ஒளியின் மைந்தன் கௌதம புத்தரின் போதனைகளுக்கு அமைவாக நடக்கும் பௌத்த சங்கத்தினரே பௌத்த தர்மத்தின் உண்மையான காவலர்களாக இருக்க முடியுமென்பதை சாதாரண மக்கள்கூட தெளிவாக அறிவர்.

பொதுபலசேனாவின் நடவடிக்கைகள் நாட்டின் அனைத்து இன மக்களுக்கும் அச்சுறுத்தலாக அமைவது குறித்து அரசாங்கம் உணர்ந்துகொள்வது மிகமிக அத்தியாவசியமாகும்.

பொதுபலசேனா அனுபவித்துவரும் இந்தவிதமான சுதந்திரம் கட்டுப்பாடின்றி தொடருமேயானால் அதுவே நாட்டினை 1983ஆம் ஆண்டுக்குப் பிந்திய இருண்ட யுகம் போன்றதொரு காலகட்டத்திற்குள் இழுத்துச் சென்று விடும் என்பது வெளிப்படை.

மூன்று தசாப்தங்களாக தொடர்ந்த குழப்பகரமான இந்த இரத்தமய கால அனுபவத்தை மீண்டும் பெறுவதற்கு பகுத்தறிவுள்ள எந்தவொரு நேர்மையான குடிமகனும் எதிர்பார்க்கமாட்டான் என்பது திண்ணம்.

அளுத்கம பேருவளை துன்பியல் அனர்த்தங்களுக்கு காரணமானவர்களும் காவியுடை பாதுகாப்பில் மறைந்திருப்பவர் களுக்குமான இந்தக் குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவது, நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுகின்ற அரசுக்கு மிக அவசியமானது.

முதலில் இவர்களை கைது செய்வ துடன் பின்னர் அவசியமான சட்ட நடவடிக்கைகளை தேடிக்கொள்வதன்மூலமுமே தமது சொந்த நலன்களுக்காக நாட்டையே பணயம் வைக்கும் ஒரு சிலரது குறிக்கோளை முறியடிக்க முடியும்.



கலவரத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் ஒரு பகுதி

பொதுபலசேனாவைத் தடை செய்வதே தமக்கான பாதுகாப்புக்கு உத்தரவாதமா யிருக்குமென இந்த நாட்டின் சிறுபான்மை சமூகங்கள் கோருமானால் தாமதமின்றி நிர்வாகம் அதனை செய்தேயாக வேண்டும்.

விடுதலைப்புலிகள் அரவணைத்துக் கொண்டிருந்த பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து ஒழித்துக்கட்டியிருந்ததும் இந்த நிர்வாகமே என்பதால் போருக்கான உண்மைவிலை என்ன என்பதை அது மிக நன்றாகவே தெரிந்து வைத்துள்ளது.

எனவே மற்றுமொரு யுத்தம் ஆரம்பமாவதற்கான தவறை அது அனுமதிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈழத்து ஆறுபடை வீடுகளில் ஒன்றாக திகழும் இணுவில் கந்தசுவாமி கோவில்

இணுவில் கந்தசுவாமி கோவில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற இத் திருத்தலம் பாவலர்கள், புரவலர்களால் போற்றப் பெற்ற தொன்மை மிகு திருத்தலம்.

ஈழத்தில் உள்ள ஆறுபடை வீடுகளில் ஒன்றாகத் திகழும் இத்தலத்தில் அமைந்த சண்முகப் பெருமான் திருச்செந்தூரை ஒத்த திருக்கோலம் கொண்டவர் எனப் பலரும் கூறுவதுண்டு.

இவ்வாலயம் அமைந்த இடமோ இறைவனின் அருள்வாக்குக்கு அமையப் பெற்றது. 1735 ஆம் ஆண்டளவில் குழந்தையர் வேலாயுதர் என்றும் அன்பரிடம் உனது மூதாதையர் வைத்து வணங்கிய இடத்தில் என்னை வைத்து வணங்குவாயாக என இறைவர் கட்டளையிட அவ்விடத்தை நான் எப்படி அறிவேன் என அடியவர் வினாவ உனது வெற்றிலை தோட்டத்தில் நொச்சித்தடி ஒன்றினை ஊன்றி காலால் மிதித்து விட்ட இடத்தை உணர்த்தி காட்டியதாக வரலாறு கூறுவர். இதற்கமைவாக ஆலயம் அமைந்த காணியின் பெயர் நொச்சி ஒல்லை மிதியன் என விளங்குகின்றது.



இணுவில் கந்தசுவாமி கோவில் மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாக்கப்படுகிறது

காலத்தால் முற்பட்டதும் இத்தனை அனுகூலம் நிறையப்பட்டதுமான இவ்வாலயம், நோய் பிணிகளைத் தீர்க்கும் தீத்தத்தை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

அடியவர்கள் பிணி தீர்க்கும் வைரவ தீர்த்தம், வைரவர் சந்நிதி முன் அமைந்திருப்பது இவ்வாலயத்திற்குரிய தனிச்சிறப்பு. பகல், இரவு என்று பாராமல் இத்தீர்த்தத்தில் நீராடியும் பருகியும் தம் பிணியை அடியவர்கள் தீர்த்த வண்ணமுள்ளனர்.

தலத்தின் தல விருச்சமாக சண்முகப் பெருமானால் நாட்டப்பட்ட நொச்சி இன்றும் மூலஸ்தானத்தருகே காணப்படுகின்றது. இறைவன் காலால் அடையாளம் காட்டி நொச்சித்தடியை ஊன்றிய இடம் என்பதை நினைவு படுத்துவதற்கு தல விருச்சத்தின் அடியில் சிறு மாடம் அமைக்கப்பட்டு பாதச்சுவடிகள் பதிக்கப்பட்டு அடியவர்கள் வணங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்திய சிற்ப வல்லுநர்களின் கைவண்ணத்தாலும் ஈழத்து தலைசிறந்த கட்டட நிர்மாணிகளாலும் நிர்மாணிக்கப்பட்டு பொலிவுபெற்று அழகுக்கோர் ஆலயம் எனத் திகழும் இவ்வாலயத்தின் திருமுழுக்கு பெருவிழா 4.7.2014 நாளை காலை 8.21 - 10.51 இடையில் வேதகோசம் முழங்க, மங்கள வாத்தியம் வானைப் பிளக்க, பக்தர்களின் அரோகரா கோசம் எழுப்ப நிகழவுள்ளது. அனைவரும் வந்து ஆறுமுகப் பெருமானின் அருளை பெறுவீர்! வாரீர்! குடமுழுக்குக் காண.

மா. ந.பரமேஸ்வரர்

# நேர்த்திக்கடன் நிறைவேற்றுவோருக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரசித்தி பெற்ற கோயில்களுக்கு நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் அடியவர்களுக்கு யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியம் தொழிலாளர்களை நியமித்துள்ளது.

எனவே நேர்த்திக் கடனை நிறைவேற்றும் அடியவர்கள் இல. 8, குருநகர் மார்க்கட், சின்னக்கடை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளும்படி மேற்படி ஒன்றியத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவற்றை மீறி பிறமாவட்டங்களிலிருந்து அல்லது பிற ஊர்களிலிருந்து வந்து நேர்த்திக் கடன்களை செய்ய தடை செய்யப்பட்டுள்ளது எனவும் மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# அழகியல் கண்காட்சி

யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் அழகியல் கண்காட்சி இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை அதிபர் க.தருமகுலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி க.ஜெயபாலசிங்கம் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக சித்திரப் பாட ஆசிரிய ஆலோசகர் து.துஷ்யந்தன், நடன பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி அ.இராஜபாரதி, சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர்களான திருமதி சா.தர்மராஜா, திருமதி சா.விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (2)

# அவுஸ்.பயணித்த 153 அகதிகளும் ஒப்படைப்பு

## இலங்கை கடற்படை மறுப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோரிச் சென்ற 153 அகதிகளும் இலங்கை கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின்- கிறிஸ்மஸ்தீவில் உள்ள அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி த கார்டியன் பத்திரிகை இதனைத் தெரிவித்துள்ளது.

குறித்த படகு தொடர்பான எந்தவொரு தகவலும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் ஊடகங்களுக்கு வழங்கப்படவில்லை.

இதனை நடுக்கடலில் வைத்து இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைத்துள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

எனினும் இதனை இலங்கை கடற்படை மறுத்துள்ளதாக இலங்கையின் ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் அகதி அந்தஸ்து கோரி வருகின்றவர்களை விசாரணைகள் இன்றி நடுக்கடலில் வைத்து திருப்பி அனுப்புகின்றமையும், அந்த அகதிகள் எங்கிருந்து வந்தார்களோ அங்கேயே அவர்களை திருப்பி அனுப்புகின்றமையும் சர்வதேச சட்டத்தை மீறும் செயல் என்று த கார்டியன் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# பொதுபல சேனாவை விமர்சித்த விமல் வீரவன்சவை தாக்க முயற்சி

## இத்தாலியில் சம்பவம்

(கொழும்பு)

இத்தாலிக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் விமல் வீரவன்ச, பொதுபல சேனாவைப் பற்றி விமர்சித்ததால் அவர் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுபல சேனா நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது, பொதுபல சேனாவின் தேசிய அமைப்பாளரான வித்திர தெனிய நந்த தேரோ இதனை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் விமல் வீரவன்ச தற்பொழுது இத்தாலிக்கு சென்றுள்ளார். அவரை அந்நாட்டில் வாழும் சிங்கள மக்கள் ஒரு கூட்டத்திற்கு கலந்து கொள்ளுமாறு அழைத்திருந்தனர்.

அங்கு அவர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது பொதுபல சேனாவைப் பற்றி மிக கடுமையாக விமர்சித்து பேசிக் கொண்டிருந்ததாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு இருந்த சிலருடன் அமைச்சரின் சேட்டை பிடித்து தள்ளியதாகவும் கூறினார்.

மேலும், பொதுபல சேனாவைப் பற்றி இங்கு பேசக் கூடாது என அவர்கள அமைச்சரிடம் தெரிவித்ததாகவும் வித்திர தெனிய நந்த தேரோ குறிப்பிட்டார். இச் சம்பவத்தினையடுத்து, உடன் செயற்பட்ட அமைச்சரின் மெய்பாதுகாவலர் அமைச்சரை பாதுகாத்ததாகவும் தேரர் தெரிவித்தார். (2)

## மரதன் ஓட்டப் போட்டி

(நல்லூர்)

புத்தூர் கதிர் கல்வி நிறுவனத் தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ் வினை முன்னிட்டு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு கல்வி நிறுவன மாணவர் களுக்கான மரதன் ஓட்டப்போட்டி நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-134)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: 44.5 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Computer Engineering / Data acquisition Officer (அவுஸ்திரேலியா – சிற்ரிசன்)<br>தொ.இ: B/3301 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: 52 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc / Radiography<br>தொ.இ: G/3303 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 16.25 செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, தொழில் நுட்ப கல்லூரி கற்கை நெறி/சொந்த வியர்பாரம்<br>தொ.இ: B/3302 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 60.75 செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L / தையல்<br>தொ.இ : G/3304 |
| பிறப்பு: 1986 கிறிஸ்தவம் RC<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 60.5<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L / AC Technician (சவுதி, தற்போது இலங்கையில்)<br>தொ.இ: B/3306 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 61.25 செவ் 1 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / நூலக உதவியாளர்<br>தொ.இ: G/3305 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 6.25 செவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L, தாதியர் கற்கை / தாதியர்<br>தொ.இ: B/3308 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 61.25<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HNDA / எழுதுவினைஞர்<br>தொ.இ: G/3307 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட மக்களின் பரிதாபத்தை பாருங்கள்

## வடக்கு மாகாண முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

**2010 ஆம் ஆண்டு மீள்குடியேறிய பின்னரும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஏற்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை இப்பிரதேசத்திற்கும் பகிர்ந்தளிப்பதற்கு அரச, அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் காட்டும் பாரபட்சமானது அடிப்படை தேவைகளை தேடி அலையும் இப் பிரதேச மக்களின் மனங்களை கவலைக்குள்ளாக் குகின்றது என கரைச்சி பிரதேச உறுப்பினர் த.சேதுபதி சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**



கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்திற்கு சென்றிருந்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பாரதிபுரம் கிராமத்தில் மக்களுடனான சந்திப்பின் போது அவர் மகஜர் ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

கரைச்சி பிரதேசத்தைச் சேர்ந்த பாரதிபுரம், விநாயகபுரம், பொன்னகர், மலையாளபுரம், விவேகானந்தநகர், தொண்டமான் நகர், ஆனந்தபுரம், ஆனந்த நகர், உதய நகர், செல்வாநகர், அம்பாள் குளம், ஊற்றுப்புலம், முறிப்பு, சாந்தபுரம், கிருஷ்ணபுரம் ஆகிய பதினைந்து கிராமங்கள் சார்பிலேயே மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உயரதிகாரிகளின் கவனத்திற்கு இவ்விடயங்களை கொண்டு வர விரும்புகிறேன்.

இம் மக்கள் 1977, 1983 இற்கு முன்னரான காலப்பகுதியில் இலங்கையின் மத்திய மலையக மற்றும் தென்பகுதியிலே வாழ்ந்தவர்கள்.

காலகாலமாக இலங்கை தேசிய பொருளாதாரத்தை தங்கள் தோள்களிலே சுமந்தவர்.

இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்தவர்கள் இந்து மக்களின் அடிப்படை தேவைகளை புரிந்து கொள்ளவில்லை.

மாறாக வறுமையின் பிடிக்குள் இருந்து பெட்டி படுக்கைகளையும் தீயிட்டுக் கொளுத்தி அடித்து விரட்டப்பட்டனர்.

செய்வதறியாது திகைத்த இந்த மக்கள்வடக்கின் கிளிநொச்சி,மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் குடியேறினார்கள்.

இங்கு வந்து இப் பிரதேசத்தில் பாரிய காடுகளை வெட்டி வாழ்வை ஆரம்பித்த போதும் போராட்ட காலங்களின் போதும் எதிர்நோக்கிய துன்பதுயரங்கள் ஏராளம்.

- 2010 ஆம் ஆண்டு மீள்குடியேறிய பின்னரும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஏற்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை இப் பிரதேசத்திற்கும் பகிர்ந்தளிப்பதற்கு அரச, அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் காட்டும் பாரபட்சம் அடிப்படை தேவைகளை தேடி அலையும் இப் பிரதேச மக்களின் மனங்களை கவலைக்குள்ளாக்கியுள்ளது.

வீதி புனரமைப்புக்கள் விவசாயத்திற்கும் குடிப்பதற்குமான நீர் தேவைகள், வீட்டுத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டு வரும் குறைவான நிதி, குடியிருக்கும் காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் இன்மை, மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புக்கள் இன்மை, மக்களுக்கான தொழில் வாய்ப்பின்மை,தபால் மற்றும் சுகாதார வசதிகள் இன்மை, சிறுவர் மற்றும் முதியோர் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டிய தேவைகள், இங்கு காணப்படும் அனைத்து ஆலயங்களும் புனரமைத்துக் கொள்ள முடியாத நிலை, வல்லமையான விளையாட்டு வீரர்கள் இருந்தும் விளையாட்டுத் துறையை மேம்படுத்த அக்கறை காட்டாமை, மானிடத்தை ஆரம்பிக்கும் முன்பள்ளிக் கல்வி ஆக்கபூர்வமான நெறிப்படுத்தல் இன்றி சீரழிவு. இவைதவிர எதற்கெடுத்தாலும் பணம் செலுத்த வேண்டிய நிலை.

இவ்வாறான நிலைமைகளுக்குள் வாழ்கின்ற எங்கள் வாழ்வியல் தன்மைகளை முதலமைச்சரின் மேலான கவனத்திற்கும் இங்கு இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருக்கும் துறைசார் மாகாண அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர், உறுப்பினர்களின் கவனத்திற்கும் இப்பிரதேச வாழ் மக்கள் சார்பில் இதனை முன் வைக்கிறேன் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-271)




## பரந்தனில் சடலமாக மீட்பு

(கனகபுரம்)

டிப்பர் வாகனத்தின் மேலிருந்து தவறி விழுந்ததால் நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் இரவு பரந்தன் சந்திக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தின் மேலிருந்து ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் குண்டகசாலை, கண்டியைச் சேர்ந்த இராசேந்திரன் இராயப்பு பிரசாந் (வயது 52) என்பவரேஉயிரிழந்தவராவார். கிளிநொச்சி வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்துள்ள கிளிநொச்சி பொலிஸார் மேற்படி நபரின் இறப் பில் சந்தேகம் உள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (அ-259)

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான கடன்திட்டங்கள்

(கிளிநொச்சி)

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான கடன்திட்டம் பரவலான (பொதுவான) கடன் திட்டம் மற்றும் அரச ஊழியர்களுக்கான கடன்திட்டம் ஆகியவை நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், பெண்களை குடும்பத்தலைமைத்துவமாகக்கொண்ட குடும்பங்கள், அங்கவீனர் அல்லது மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட குடும்பம் மற்றும் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள் தலா ஒரு இலட்சம் ரூபா வரையில் இக் கடன் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கான வட்டியாக 3.73 வீதமே அறிவிடப்படும். மேலும் இக் கடனுக்கான பணத்தொகையை மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் பத்து ஆண்டு காலப் பகுதிக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

இதனைவிட வீட்டு கூரையை உறுதியாக்கல், கட்டடத்தில் சிறு திருத்தங்கள், தரையின் சீர்திருத்தம், கழிவறை திருத்தம், மின்வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றுக்காக 25 ஆயிரம் ரூபா கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இக் கடன் திட்டங்களுக்கு பிணையாக ஒரு அரசாங்க அலுவலர் கையொப்பமிடல் வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இக் கடன் திட்டத்திற்கென 80 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 43 குடும்பங்கள், கண்டாவளை 15 குடும்பங்கள், பூநகரி 14 குடும்பங்கள், பளை 08 குடும்பங்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும் தேவை கருதி இவ்வெண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படலாம்.

இதேவேளை அரச ஊழியர்கள் இக்கடனைப் பெறுவதற்கு ஒரு அரச அலுவலர் பிணையுடன் ஐந்து இலட்சம் ரூபா வரை தேவைக்கேற்றவாறு பெற்றுக் கொள்ளலாம். இதற்கென 72.358 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பரவலான கடன் திட்டத்தில் 2 இலட்சம் ரூபா வரை 60 குடும்பங்கள் பயன்பெறமுடியும். இதற்கென 9.6 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இக்கடன் திட்டங்களை பெற்றுக்கொள்ள விரும்புவோர் ஏ9 வீதி, 55 ஆம் கட்டை எனும் முகவரியில் அமைந்துள்ள "தேசிய வீடமைப்பு அதிகார சபை" அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-254)

## விபத்தில் சிக்கி இறந்தது முதலை

வவுனியா ஓமந்தை பிரதேசத்தில் ஏ9 வீதியை கடந்து கொண்டிருந்த முதலையொன்று வாகனத்தில் மோதி இறந்துள்ளது.

இச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்தது. வவுனியா மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வரும் நிலையில் குளங்களில் நீர் வற்றியுள்ளது. இதனால் முதலைகள் தற்போது நீர் தேடி நிலப்பரப்பிற்குள் வருகின்றன.

இதனாலேயே இவ் விபத்து நேர்ந்துள்ளது. (அ-250)

## ஜோதிலிங்க தரிசனம்

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜோதிலிங்க தரிசனமானது இன்றும் நாளையும் வவுனிக்குளம் சிவன் கோவில் தேர், தீர்த்த திருவிழாக்களில் காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த ஜோதிலிங்க தரிசன நிகழ்வில் பாரதத்தின் மகிமை வாய்ந்த 12 ஜோதிலிங்கங்களில் ஒன்றான சோமநாதர் ஆலயத்தின் ஜோதிலிங்கம் பக்தர்கள் தரிசனத்திற்காக வைக்கப்படவுள்ளது.

அத்துடன் பக்தர்கள் தமது மனக்குறைகள், வேதனைகள், சுமைகளை அர்ப்பணம் செய்தும் யக்ய குண்டமும் வைக்கப்படவுள்ளது.

அத்துடன் நாளாந்த வாழ்க்கையில் வருகின்ற மனக்குழப்பங்கள், மன அழுத்தப் பிரச்சினைகள் அனைத்துக்கும் முகம்கொடுத்து எதிர்நோக்கி சமாளிக்கும் சக்தியை அடைய வழி வகுக்கும் இராஜயோக படவிளக்க கண்காட்சியும் மனசாந்திதரும் தியான அனுபவமும் இடம்பெறவுள்ளன.

மேலதிக தொடர்புகளுக்கு 077 2392959 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறமுடியும். (2)




வவுனியா திருமறைக் கலாமன்றத்தின் **எங்கள் தோள்களில்** எனும் விழிப்புணர்வு வீதி நாடகம் அண்மையில் இடம்பெற்றது. இவ்வீதி நாடகத்தின் ஒரு காட்சியையும் பங்கு பற்றிய கலைஞர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

## மாடு முட்டியதில் சிறுவன் படுகாயம்

(கனகபுரம்)

வீட்டின் முன்பாக வீதியில் நின்ற சிறுவனை பசுமாடு முட்டியதில் தலையில் படுகாய மடைந்த சிறுவன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் பெரிய பளையைச் சேர்ந்த கமலரூபன் தேனுஜன் (வயது 2) என்ற சிறுவனே படுகாய மடைந்தவராவார். (அ-259)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடம் தானே நம்பிக்கை இழப்பது
இறைவனிடம் நம்பிக்கை இழப்பதாகும்.
~ விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பொது பல சேனா மீது எவரேனும் கைவைத்தால் நாடு கொந்தளிக்கும்

## எச்சரிக்கிறார் அமைப்பின் பொதுச்செயலாளர்

இரு தரப்பினருக்கிடையே ஏற்பட்ட சிறிய பிரச்சினையினை முழு நாட்டிற்கும் பரப்பி சர்வதேச அளவில் முஸ்லிம்கள் கொண்டு சென்றுவிட்டனர். பொது பல சேனாமீது எவரேனும் கை வைத்தால் முழுநாடும் கொந்தளிக்கும். எமது தரப்பு நியாயங்களை ஜனாதிபதியும், பாதுகாப்புச் செயலாளருமே செவிமடுத்தனர். வேறு எவரும் அவற்றைக் கண்டுகொள்ளவில்லை என்று பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மதவாதத்தையும் அதனூடாக தீவிர வாதத்தினையும் பரப்பி அப்பகுதி மக்களை பயங்கரவாதிகளாக மாற்றியுள்ளனர். இதன் விளைவாகவே அப்பகுதியில் இனக்கலவரம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொது பல சேனா அமைப்பு நேற்று முன்தினம் ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்திப்பின்போதேஅவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒரு கிராமத்தில் ஏற்பட்ட சிறிய சண்டை இன்று சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்லப்பட்டுவிட்டது. அளுத்கம சம்பவம் ஏற்பட்டதற்கு முஸ்லிம் அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளே காரணம். சிறிய பிரச்சினையாக ஆரம்பித்த விடயம் இறுதியில் இரு இனங்களுக்கிடையிலான கலவரமாக மாற்றப்பட்டுவிட்டது.

நடந்த சம்பவம் ஒரு சிறிய சம்பவம். அதை பெரிதுபடுத்தி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அதுமட்டுமின்றி இந்த பிரச்சினைக்கு சம்பந்தம் இல்லாத எம்மீது இறுதியில் குற்றம் சுமத்திவிட்டனர்.

இப்போது ஆளும் தரப்பினரும் எதிர்க்கட்சியினரும் பொது பல சேனா அமைப்பினரையே குற்றம் சுமத்தி வருகின்றனர். இது வேடிக்கையாகவும் எமக்கு வேதனையாகவும் உள்ளது.

உண்மையிலேயே இந்த சம்பவம் ஏன் ஏற்பட்டது என்பதை எவரும் கேட்கவில்லை. நாம் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக தெரிவித்தோம். நாட்டில் முஸ்லிம் மதவாதிகளின் தீவிரவாத செயற்பாடுகள் காணப்படுகின்றது என. அதை எவரும் கண்டுகொள்ள வில்லை.

இந்த இனக்கலவரத்திற்கு நாம்தான காரணம். அவ்வாறு பொது பல சேனா அமைப்பினர்தான் காரணம் என்றால் அதற்காக எம்மை கைது செய்து சட்ட நடவடிக்கைகள் எடுங்கள். அதேபோல் கைது செய்யப்பட்டுள்ள அப்பாவி சிங்கள இளைஞர்களை உடனடியாக விடுவித்துவிட வேண்டும். சம்பவத்தில் ஆயுதமேந்திய முஸ்லிம்கள் இன்று சுதந்திரமாக நடமாடுகின்றனர். ஆனால், கலவரததை தடுக்க முயன்ற சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரசாங்கமும் எதிர்க்கட்சியும் பொலிஸும் நாட்டிற்கு உண்மையாக நடக்க வேண்டும். அதைவிடுத்து பொது பல சேனா அமைப்பின் மீது எவரேனும் கைவைத்தால் இந்த நாடே கொந்தளிக்கும்.

பொது பல சேனா என்பது வெறுமனே ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு அல்ல. பொது பல சேனா என்பது நாட்டில் உள்ள அனைத்து பௌத்த இனத்தையும் சிங்கள மக்களையும் கொண்ட அமைப்பு. எம்மை அழிக்க நினைப்பது பௌத்த மக்களை அழிப்பதற்கு சமமாகும். இதை அனைத்து தரப்பினரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார். (2)

# உற்பத்தி நிறுவனங்களை வடக்கில் உருவாக்குங்கள்

பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்திபற்றிச் சிந்திக்காத எந்த இனமும் உருப்பட்டதான வரலாறு இல்லை.

ஓர் இனம் நிலைத்திருக்க வேண்டுமாயின்– அந்த இனம் தனது சந்ததியின் இருப்புக்கு உதவவேண்டுமாயின் நிலைத்த அபிவிருத்தி பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அதிலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் சமூகம் தனது வாழ்வுரிமையில் அபிவிருத்திக்கு கணிசமான இடம்கொடுப்பது அவசியமாகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் சமூகம் உரிய வழிகாட்டலுக்கு உட்படாமல் போகுமாயின் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும் என்பது உலக அனுபவங்கள் நமக்கு உணர்த்தும் பாடமாகும். எனவே மிக நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழினம் தனது அபிவிருத்தி குறித்து அதிகூடிய கவனம் எடுப்பது அவசியம்.

யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்தல், இழந்த உரிமையை வென்றெடுத்தல், திட்டமிட்டு அமுல்படுத்தப்படும் நெறிபிறழ்வான சூழமைவில் இருந்து எமது இளைஞர் சமூகத்தைப் பாதுகாத்தல் என்ற பல்பரிமாணங்களில் எங்கள் செயற்றிட்டங்கள் அமைவது அவசியம்.

இருந்தும் இதுபற்றி நாம் சிந்திக்காதவர்களாக இருப்பதன் காரணமாக எங்கள் உள்ளகப் பொருளாதார வளம் வெளிச்செல்கிறது.

இந்த நிலைமையானது எங்கள் மக்களில் கணிசமான பகுதியினரை வேலையற்றவர்களாக ஆக்கிவிடும்.

வீதி திருத்தம், குளம் வெட்டுதல், பாலம் கட்டுதல் என்ற தற்காலிக வேலைகளை நிரந்தரம் போலக் கருதிக் கொள்வதன் அபத்தமே வேலை இழப்பு நிலைமையாக மாறுகிறது.

எனவே தற்காலிக வேலைகளை நம்பி இருக்காமல் எங்கள் மண்ணில் உற்பத்தி முயற்சிகளை ஊக்கிவிக்கின்ற–உற்பத்தி நிறுவனங்களை ஆரம்பிக்கின்ற திட்டங்கள் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

வட மாகாணத்தைப் பொறுத்தவரை உற்பத்தி நிறுவனங்கள் என்று குறிப்பிட்டுக் கூறும் அளவிற்கு எதுவுமில்லை எனலாம்.

வேலை செய்யக்கூடிய இளைஞர் சமூகம் வேலையற்று இருக்கின்ற போது ஏற்படக் கூடிய நிலைமைகள் எவ்வாறாக இருக்கும் என்பது நாம் கூறித் தெரிய வேண்டும் என்ற அவசியமிருக்காது.

அதேநேரம் வடபகுதியில் உற்பத்தி நிறுவனங்களை ஆரம்பிக்கக் கூடிய மனநிலையில் இலங்கை அரசு இருக்கும் என்று நினைப்பதும் மடமைத்தனம்.

அரசைப் பொறுத்தவரை வடக்கு மாகாணத்தில் போர்ச் சூழல் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடே இருக்கும்.

அதாவது விடுதலைப்புலிகள் என்ற அச்ச நிலை இல்லாமல் இருக்க வேண்டும். அதேநேரம் ஒரு பதற்றமான சூழ்நிலையும் வடக்கு மாகாணத்தில் நிலவ வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடு.

எனவே இத்தகைய நிலைபாட்டில் இருப்பவர்கள் உற்பத்தி நிறுவனங்களுக்குப் பதிலாகப் படைத்தரப்பில் இளைஞர்களை இணைத்தல் என்ற வியூகத்திலேயே அதி தீவிர கவனம் செலுத்துவர். ஆகையால் அதனை நாம் குறைபட்டுக் கொண்டிருக்காமல் ஆக வேண்டிய காரியங்களைப் பார்க்க வேண்டும்.

அப்படியாயின் உற்பத்தி நிறுவனங்களை வடக்கு மாகாணத்தில் ஆரம்பித்து எங்கள் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். இது தொடர்பில் வடக்கு மாகாண அரசு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ள திட சங்கற்பம் பூணவேண்டும்.

நினைப்பது, பின்னர் அதனை மறப்பது என்ற எங்கள் நிர்வாகப் போக்கு எங்கள் இனத்தின் முன்னேற்றமற்ற நிலைமைக்குக் காரணம் என்பதை நாம் புரிந்து கொண்டு, சர்வதேச அமைப்புகள் மற்றும் எங்கள் புலம்பெயர் உறவுகளின் பங்களிப்புகளுடனான உற்பத்தி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டால் இன, மொழி, மண் பற்று எங்கள் தாயகத்தில் பரவிக் கிடக்கும் என்பது நிறுத்திட்டான உண்மை.

# சஞ்ஜீவவுக்கு எதிராக பொன்சேகா வழக்கு

ஜனநாயகக் கட்சியின் முன்னாள் ஊடக செயலாளர் சஞ்ஜீவ சமரசிங்கவுக்கு எதிராக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா நேற்று நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

500மில்லியன்ரூபா இழப்பீடுகோரியே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சஞ்ஜீவ சமரசிங்க, சரத் பொன்சேகாவுக்கு அவதூறு ஏற்படும் வகையில் செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் வழியாக சமரசிங்க, பொன்சேகாவுக்கு அவதூறு ஏற்படும் வகையில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இதற்கு எதிராக அவருக்கு சட்டத்தரணி ஊடாக இழப்பீடு கோரி அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அதற்கு பதில் கிடைக்காத நிலையில், வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஜனநாயகக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

சரத் பொன்சேகா சர்வாதிகாரியாக நடந்து கொள்கிறார் என்று குற்றம் சுமத்தியிருந்த ஜனநாயகக் கட்சியின் முன்னாள் ஊடக செயலாளர் சஞ்ஜீவ சமரசிங்க, அந்த கட்சியில் இருந்த விலகி கொண்டார்.

பண மோசடி குற்றச்சாட்டு காரணமாக அவர் கட்சியில் இருந்து விலகியதாக பொன்சேகா தரப்பினர் தெரிவித்திருந்தனர். (2)

# தொடர் சொற்பொழிவு

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு கந்தபுராணம் எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவின் தொடர் சொற்பொழிவு நேற்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை வரை முற்பகல் 11 மணி தொடக்கம் 12 மணிவரை மேற்படி ஆலயத்தில் நடைபெறும். (2)

# சுதந்திரத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்திக் கொடுத்தவர் ஜனாதிபதி

## சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பெருமிதம்

நாட்டுக்கு சுதந்திரத்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்திக் கொடுத்த ஒரே தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ மஹாராம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒரே தசாப்த காலத்தில் ஜனாதிபதி மஹிந்த, சுதந்திரத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

1994 ஆம் ஆண்டிற்கு முன்னதாக ஆட்சி செய்த தலைவர்களினால் உரிய இலக்குகளை எட்ட முடியவில்லை.


வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு ஜனாதிபதி அடிபணியவில்லை. விவசாயிகளின் பொருளாதாரத்தையும் மேம்படுத்தி ஏனையவர்களின் பொருளாதாரத்தையும் ஜனாதிபதி மேம்படுத்தியுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# சத்திய தரிசனம்



## கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

- நம்மை வழிநடத்தும் கடவுள் ஒருவர் இருக்கிறார். அவரை அறிவது ஒன்றே கிடைப்பதற்கு அரிய இந்த மனிதப்பிறவியின் நோக்கம். எறும்பு சுயநலமில்லாமல் தன் இனத்தோடு கூடி வாழ்கிறது. நாமும் ஒற்றுமை உணர்வுடன் கூடி வாழ்ந்து கோடி நன்மை அடைவோம்.
- ஒரு பெரிய மரத்தையே கரையான் அரித்து விடுவது போல, தீயகுணத்தால் மனம் அடியோடு அழிந்து போகும்.நல்ல விஷயங்களை கேட்டால் மட்டும் போதாது. உண்ணும் உணவு ஜீரணமாகி உடலோடு கலப்பது போல, மனதால் நல்லதை உள்வாங்கி செயலிலும் காட்ட வேண்டும்.
- வாழ்க்கை நாணயம் போன்றது. இன்பம், துன்பம் இரண்டு பக்கங்களையும் அதில் யாராலும் தவிர்க்க முடியாது.
- மனிதன் சுயகட்டுப்பாட்டை இழந்து விட்டால், பண்பாடு சிதைந்து மிருகமாக மாறி விடுவான். பெற்றோரை மதித்து நன்றி காட்டுங்கள். அவ்வாறு நன்றி காட்ட மறந்தால், வாழ்வு அர்த்தமற்றதாகி விடும்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## தெரிந்து கொள்ள வேண்டியவை

திருக்கோயில்களில் புஷ்பம் கொடுத்தால் அதை காதில் வைத்துக் கொள்ளக் கூடாது. வீட்டிலிருந்து வெளியூர் புறப்படும் பொழுது முன்வாயில் வழியாகப் போகவேண்டும். பின்வாயில் வழியாகப் போகக்கூடாது.

வெறும் தரையில் அமர்ந்து அல்லது கல்லின் மீது அமர்ந்து அல்லது மூங்கிற் பாய்மீது அமர்ந்து பூசை செய்யக்கூடாது. மரப்பலகை, கம்பளம், தர்ப்பாசனம் போன்றவையில் அமர்ந்தே பூசை செய்யவேண்டும். ஈர ஆடையுடன் சுப காரியங்கள் செய்யக்கூடாது. காய்ந்த ஆடை கிடைக்காவிட்டால் அந்த ஈர ஆடையை ஏழுமுறை உதறி உலர்ந்த பாவனையாகக் கட்டிக்கொள்ளவேண்டும். அசுப காரியங்கள் மட்டுமே ஈர ஆடையுடன் செய்யப்படுகின்றன.

வீட்டிற் பூசை அறையில் தெய்வப்படங்களை வைத்து வணங்கும்போது மறைந்த பெற்றோர் படம், மூதாதையர் படத்தைத் தெய்வங்களுடன் சேர்க்காமல் தனியாக வணங்கினால் பலமடங்கு பலன்தரும். கோபத்தைப் பொறுமையால் வெல்லவேண்டும். துஷ்டபுத்தி உள்ளவனை நல் உபதேசத்தால் வெல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் போராட்டத்தின் மத்தியில் நடைபெற்ற ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தை வெளியேற்றியது ஆர்ஜென்டீனா



பிரேசிலில் நடைபெற்று வரும் உலகக் கோப்பை காற்பந்து போட்டியின் நொக் அவுட் சுற்றில் சுவிட்சர்லாந்து அணியுடன் மோதிய ஆர்ஜெண்டீனா 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

ஆட்டத்தின் ஆரம்ப நேரத்தில் இருந்து தனது முதல் கோலினை பதிவு செய்ய ஆர்ஜெண்டீனா மேற கொண்ட அனைத்து முயற்சிகளும் எதிர் அணி கோல் கீப்பர் தடுத்த தாலும், வலையினை பந்து ஓட்டிச் சென்றதாலும் விரயத்தில் முடிந்தன.

இலக்கிட்ட நேரமான 90 நிமிடங்கள் முடிந்த பின்னரும் இரு அணிகளுமே கோல் ஏதும் அடிக்காமல் இருந்தன. பின்னர், வழங்கப்பட்ட கூடுதல் நேரத்தின் 118 ஆவது நிமிடத்தில் ஆர்ஜெண்டீனாவின் ஏஞ்சல் டி மரியா முதல் கோலினை பதிவு செய்தார்.

அதற்கு பதிலடியாக அடுத்த ஓரிரு நிமிடத்தில் சுவிட்சர்லாந்து வீரர் கோல் வலையை நோக்கி திருப்பி விட்ட பந்து கம்பத்தில் பட்டு வெளியே வந்து விழுந்ததால் தனது கணக்குக்கு சுவிட்சர்லாந்து அணி கோல் ஏதும் பதிவு செய்யாத நிலையில் கூடுதல் நேரமும் முடிவடைந்தது.

ஏஞ்சல் டி மரியா அடித்த கோலின் மூலம் 1:0 என்ற கோல் கணக்கில் சுவிட்சர்லாந்தை வீழ்த்திய ஆர்ஜெண்டீனா அணி காலிறுதிக்கு முன்னேறியது.

## பருத்தித்துறையை வென்றது முல்லைத்தீவு லீக் அணி

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணிக்கும் பருத்தித்துறை லீக் அணிக்குமிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் முல்லைத்தீவு லீக் அணி 3 கோல்களைப்போட்டு அபார வெற்றியீட்டியது.

இப் போட்டியானது முல்லைத்தீவு உடுப்புக்குளம் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இறுதிவரை பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்றது. ஆட்டத்தின் முதற் பாதியில் முல்லைத்தீவு லீக் அணியினர் தமக்கு கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களை மிகவும் சாதுரியமாகப் பயன்படுத்தி இரண்டு கோல்களைப் பெற்றனர். போட்டி ஆரம்பித்து 5 நிமிடத்தில் பிரசாந் முதலாவது கோலினையும் 23 ஆவது நிமிடத்தில் துஷி இரண்டாவது கோலினையும் பெற்றுக்கொடுத்தனர்.

ஆட்டம் இரண்டாவது பாதிக்காக ஆரம்பிக்கப்பட்டபோது அதிக நேரம் பருத்தித்துறை லீக் பக்கமாகவே பந்து சாதகமாக இருந்தபோதும் முல்லைத்தீவு லீக் அணியின் பின் தள காப்பாளர் தர்சனின் மூர்க்கத்தனமான தடுத்தாட்டம் மூலமும் கோல்காப்பாளர் நிப்ராஸின் சிறந்த காப்பாட்டத்தின் மூலமும் பருத்தித்துறை அணியினரால் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாதுபோய் விட்டது.

இந்தவேளை மீண்டும் தனக்கு கிடைத்த மற்றுமொரு சந்தர்ப்பத்தை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட முல்லைத்தீவு அணியின் முன்னணி வீரர் அஞ்சயன் இரண்டாவது பாதி ஆரம்பிக்கப்பட்டு 14 ஆவது நிமிடத்தில் மேலுமொரு கோலினை பெற்றுக்கொண்டார். இந்நிலையில் முல்லைத்தீவு அணி வீரர் ஒருவர் தமது கோல் எல்லைப் பகுதியினுள் முறையற்ற விதத்தில் விளையாடிய தன் காரணமாக பருத்தித்துறை அணியினருக்கு தண்ட உதை ஒன்று வழங்கப்பட்டது. பருத்தித்துறை வீரரினால் மிக வேகமாக கோல் கம்பத்தின் அருகூடாக உதைத்து கோலாக்க முனைந்தபோதும் கோல்காப்பாளர் நிப்ராஸ் மிகவும் இலாவகமாக பாய்ந்து தடுத்தார். இதனால் தமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பத்தினையும் தவறவிட்டனர் பருத்தித்துறை லீக் அணியினர்.

இறுதியில் 3 இற்கு 0 என்ற அடிப்படையில் பருத்தித்துறை லீக் அணியினரை தோற்கடித்து முல்லைத்தீவு லீக் அணியினர் வெற்றியீட்டினர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## அமெரிக்காவை பின்னுக்கு தள்ளி பெல்ஜியம் காலிறுதிக்கு தகுதி




பிரேசிலில் நடைபெற்று வரும் உலகக் கோப்பை காறபந்து போட்டியின் மற்றுமொரு நொக் அவுட் சுற்றில் அமெரிக்காவை எதிர்கொண்ட பெல்ஜியம் அணி 2:1 என்ற கோல் கணக்கில் எதிர் அணியை வீழ்த்தி காலிறுதியில் விளையாடும் தகுதியை பெற்றது.

ஆரம்பத்தில் இருந்தே பந்தினை தாங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள போராடிய இரு அணிகளின் கோல் கனவும் இலக்கிடப்பட்ட 90 ஆவது நிமிடம் வரையில் நிறைவேறாத நிலையில் கூடுதல் நேரம் அளிக்கப்பட்டது. அதன்படி, 92 ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் தனது கோல் கணக்கினை தொடங்கியது.


பின்னர், அதற்கு பதிலடி கொடுக்க முயற்சித்த அமெரிக்காவின் கனவை தவிடுபொடியாக்கி 104 ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் இரண்டாவது கோலையும் பதிவு செய்ய, அமெரிக்க அணி நிலைகுலைந்துப் போனது. சுதாரித்துக் கொண்டு 106 ஆவது நிமிடத்தில் அமெரிக்க வீரர் வலையை நோக்கி செலுத்திய பந்து, பெல்ஜியம் கோல் கீப்பரை ஏமாற்றி விட்டு அமெரிக்காவின் முதல் கோலாக மாறியது.

பின்னர் 120 ஆவது நிமிடம் வரை இழுபறியாக நீடித்த ஆட்டத்தின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவை வீழ்த்திய பெல்ஜியம் அணி காலிறுதிக்கு தகுதி பெற்று முன்னேறியது.



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் எழுவைதீவு முருகவேல் வித்தியாலய மாணவி வி.கல்சியா ஈட்டியெறிதல் போட்டியில் முதலிடத்தை பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவானார். வெற்றி பெற்ற மாணவியுடன் பாடசாலை அதிபர் எஸ்.கமலதீபன், ஆசிரிய ஆலோசகர் துசியா, தீவக கல்விவலய உடற்கல்விப் பணிப்பாளர் [illegible] நாதன், பொறுப்பாசிரியர் ரி.ஜெகநந்தினி ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம்.

## பெண்களுக்கான காற்பந்தாட்டம்; வலிகாமம் அணி வெற்றி



இலங்கை காற்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பெண்கள் காற்பந்தாட்ட அணிகளிற்கிடையில் இடம்பெற்று வருகின்ற காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் போட்டியொன்றில் வலிகாமம் காற்பந்தாட்ட அணி வெற்றிபெற்றது.

மேற்படி சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்று அண்மையில் வடமராட்சி திகம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இந்த போட்டியில் வடமராட்சி நக்கீரன் விளையாட்டுக் கழக அணியினை எதிர்த்து வலிகாமம் காற்பந்தாட்ட அணி மோதியது.

போட்டியின் 12 ஆவது நிமிடத்தில் வலிகாமம் அணியின் எஸ்.சானு முதலாவது கோலினை தனது அணிக்காக அடித்தார்.

இருந்தும், 21 ஆவது நிமிடத்தின் நக்கீரன் அணியின் என்.தர்சினி பதில் கோலினைப் போட்டார். ஆட்டம் சமநிலையில் இருந்த போது, வலிகாமம் அணியின் சானு மேலும் ஒரு கோல் போட்டு தனது அணியினை முன்னிலைப்படுத்தினார்.

முதல் பாதியாட்டத்தில் வலிகாமம் அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் வலிகாமம் அணியின் வீராங்கனை எஸ்.பவதாரணி தனது அணிக்கு ஒரு கோல் பெற்றுக்கொடுக்க ஆட்டம் வலிகாமம் அணியின் பக்கம் முழுமையாகச் சாய்ந்தது. இறுதியில் வலிகாமம் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு ஏக்கர் பனங்காடு தீயினால் எரிந்து நாசம்

## முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரப் பகுதியில் தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் உள்ள பற்றைக்காடு மற்றும் பனந் தோப்பு என்பன நேற்று இரவு 7 மணியளவில் திடீரென தீப்பிடித்து எரிந்து நாசமாகியது.

சுமார் 7 ஏக்கர் காணியில் உள்ள பனைகள் மற்றும் பற்றைக்காடுகளே இவ்வாறு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

உடனடியாக செயற்பட்ட அவ் ஊர் பொது மக்கள் பொலிஸார், மற்றும் 591 ஆவது படைப்பிரிவை சேர்ந்த இராணுவத்தினர் தீயினை நகரப் பகுதியில் பரவவிடாமல் செய்ததோடு இரண்டு மணித்தியால போராட்டத்தின் பின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சுமார் ஒரு பனைக்கு மேலாக எரிந்த தீயின் சாம்பல் பட்டினப் பகுதி எங்கும் பரவியது.

இத் தீப்பரவல் தற்செயலாக இடம்பெற்ற விபத்தா அல்லது விசமிகளால் ஏற்படுத்தப்பட்ட நாசகாரியமா என உடனடியாக தெரியவில்லை. இது தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-11,267)

## பகிரங்க...

கேள்வி எழுப்ப நான் இன்று அங்கு இல்லை என்பது ஒரு மனக்குறைதான். ஆனாலும், இங்கே இருக்கும் என் நண்பர் சுரேஷ் உட்பட கெட்டிக்கார எதிரணி எம்பிக்கள் நேரடியாக கோத்தபாயவிடம் கேள்விகள் எழுப்பலாம். இன்று கோத்தபாயவை பார்க்கக்கூட முடியாமல் இருக்கும் ஆளும் கட்சி எம்பிக்கள் கூட, கோத்தபாயவிடம்கேள்விகள்எழுப்பலாம அல்லது நேரடியாக பாராட்டி தேவாரம் பாடலாம் என்றார். (எ-11)

## இன மத...

இலங்கையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் முஸ்லிம்களுக்கு எதிராக 350க்கும் மேற்பட்ட வன்முறைகளும், கிறிஸ்தவர்களுக்கு எதிராக 150க்கும் மேற்பட்ட வன்முறைகளும் பதிவாகியுள்ளன.

முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களுக்கு எதிராக நாடு முழுவதும் அடிக்கடி நடத்தப்படுவதாக கூறப்படும் பேச்சு, பாகுபாடுகள், தாக்குதல் காரணமாக இந்த சமூகங்கள் வெறுப்புக்கு உள்ளாகியுள்ளன.

பொது பல சேனா அமைப்பு என்ற சிங்கள தீவிரவாத போக்குடைய அமைப்பு கடந்த ஜூன் 15 ஆம் திகதி அளுத்கமவில் நடத்திய பாரிய கூட்டத்திற்கு பின்னர், இன வன்முறைகள் ஏற்பட்டன.

இதன் காரணமாக குறைந்தது 4 பேர் கொல்லப்பட்டு, சுமார் 80 பேர் காயமடைந்தனர்.

முஸ்லிம்களுக்கு சொந்தமான வீடுகள், வர்த்தக நிலையங்கள், பள்ளிவாசல்கள் கொள்ளையிடப்பட்டதுடன் எரியூட்டப்பட்டன.

இலங்கையில் இந்த வன்முறைகள், சுதந்திர சமூகத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விலக்களிப்பதற்கான சூழ்நிலையை வளர்க்கின்றன என மத அல்லது நம்பிக்கை தொடர்பான விசேட அறிக்கையாளர் ஹெய்னர் பொல்லிபெல்ட் தெரிவித்துள்ளார்.

இந்த சமூகங்களின் உடல் ரீதியான பாதுகாப்பு, வழிபாட்டுத் தலங்கள், சொத்துக்களை பாதுகாப்பது பொலிஸ் மற்றும் நீதித்துறை போதுமான முனைப்புகளை மேற்கொள்ளவில்லை.

சிறுபான்மை சமூகங்களில் நம்பிக்கை, சுதந்திரம், உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கும் அதேவேளை, இன மற்றும் மத வெறுப்புகள் தூண்டப்படுவதை நிறுத்த இலங்கை உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-11)

# விபத்தில் சிக்கி சுகிர்தன் காயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் நேற்று பிற்பகல் கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியில் இராசபாதை வீதியில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் பயணித்த வாகனத்தின் மீது டிப்பர் ரக வாகனம் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. தனது காரினை செலுத்தி சென்ற மாகாண சபை உறுப்பினரின்டிப்பர் வாகனம்மீது மோதியதையடுத்து நிலைகுலைந்தார். இதனால் வீதியோரமாகயிருந்த மதகுடன் வாகனத்தை மோதியுள்ளார். இந்த விபத்து சம்பவம் தொடரபாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை விபத்துக்குள்ளான மாகாணசபை உறுப்பினர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (எ-6)

# விடுதலைப்புலி சந்தேக நபர் நீதிமன்றால் விடுதலை

(கொழும்பு)

விடுதலைப்புலிசந்தேக நபர் ஒருவரை அனுராதபுரம் விசேட மேல் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாத செயல்களுடன் சம்பந்தப்பட்டார் என்ற குற்றச்சாட்டில் இவர் சுமார் 7 வருடங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

வவுனியா ஈச்சங்குளம் பிரதேசத்தை சேர்ந்த அருள்தம்பி என அழைக்கப்படும் ஜெகநாதன் முகுந்தன் என்ற சந்தேக நபரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையின்படி அரச சட்டத்தரணி கனிஸ்க ராஜகருண, நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்ததுடன் வழக்கை திரும்ப பெறுவதாக அறிவித்தார்.

2008 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி மற்றும் ஏப்ரல் 30 ஆம் திகதி ஆகிய திகதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினராக இருந்து 100 பொதுமக்களை பயன்படுத்தி மணலாறு பகுதியில் பதுங்குகுழியை அமைத்ததாக சந்தேக நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதன் மூலம் சந்தேக நபர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை பெறும் வகையிலான குற்றத்தை செய்துள்ளதாக சட்டமா அதிபர் அனுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

சந்தேக நபருக்கு எதிராக யாழ்ப்பாணம், மன்னார் மேல் நீதிமன்றங்கள் மற்றும் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்ததுடன், சட்டமா அதிபரின் ஆலோசனையின்படி அந்த வழக்குகளில் இருந்தும் சந்தேக நபரை அனுராதபுரம் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. (எ-11)

# விலங்கு பலி பூஜை நடத்த அனுமதி பெறப்பட வேண்டும்

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

உரிய அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொண்ட பின்னர், விலங்கு பலி பூஜைகளை நடத்த இடமளிக்க முடியும் என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய சங்க சம்மேளனம் தாக்கல் செய்திருந்த மனுவொன்றை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் சிலாபம், முன்னேஸ்வரம் காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த விலங்கு பலி பூஜைக்கு இடைக்கால தடைவிதித்து உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரி காளியம்மன் ஆலய தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்து கொண்ட போதே மொஹான் பீரிஸ் அனுமதிப் பத்திரம் பெற்று பலி பூஜையை நடத்த இடமளிக்கலாம் எனக் கூறினார்.

எனினும் அனுமதிப் பத்திரத்தை பெற்று விலங்குகளை பலியிடும் பூஜை நடத்த இடமளிப்பதை தாம் எதிர்ப்பதாக தேசிய சங்க சமமேளத்தின் தேசிய அமைப்பாளர் பஸ்ஸர முல்லே தயாவங்ஸ தேரர் கூறியுள்ளார். (எ-11)

## கச்சதீவு விவகாரம்

# இந்திய அரசின் நிலைப்பாட்டை மீளப்பெற ஜெயா கோரிக்கை

கச்சத்தீவு யாருக்கு சொந்தம் என்பது தொடர்பில் இந்தியாவின் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப்பத்திரம் திரும்பப் பெறப்பட வேண்டும் என்று கோரி தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜெயலலிதா எழுதியுள்ள கடிதத்தில், கச்சதீவு பகுதிகளில் மீன்பிடி உரிமை கோரும் வழக்கின் விசாரணை சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதாகவும், அதில் முந்தைய காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் தாக்கல் செய்ததை போன்ற பதில் மனுவை, தற்போதைய பாஜக அரசாங்கமும் மீண்டும் தனது பிரமாணப்பத்திரத்தில் வழங்கியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

அதே சமயம் இந்தியாவுக்குச் சொந்தமான கச்சதீவை இலங்கை நாட்டுக்கு, இந்தியா அளித்த விவகாரத்தில் முறையான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். அரசியல் சட்டத்தில் உரிய மாற்றம் செய்யப்படாமல் சட்டத்திட்டங்களை மீறி எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைக்கு எதிராக தாம் கடந்த 2008-ம் ஆண்டு இந்திய உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தனிப்பட்ட முறையில் நேரடியாக தலையிட்டு, கச்சதீவு விவகாரம் தொடர்பான வழக்கில் புதிய பிரமாணப் பத்திரத்தைத் தயாரித்து, சென்னை நீதிமன்றத்தில் மீண்டும் அளிக்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரியுள்ளார். (எ-11)




இணுவில் கந்தசுவாமி கோயில்
மகா கும்பாபிஷேகப் பெருவிழா
04.07.2014

நேரடி ஒளிபரப்பு

டான் தமிழ் ஒளியின் சனல்

TV
(இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணம் முழுவதும்)

காலை 8-11 மணிவரை

நேரடி ஒளி பரப்புக்கு அனுசரணை

அண்ணாகோப்பி-இணுவில்
சக்திவேல் காட்வெயர்-இணுவில்
சிற்றி காட்வெயர்-யாழ்ப்பாணம்
ராஜன் ஒலிஒளி அமைப்பு-கந்தரோடை
நெற் டியிற்றல் கலர்லாப்-சுண்ணாகம்
கயோலங்கா-இணுவில்
கிருபா லேணர்ஸ்-யாழ்ப்பாணம், சுண்ணாகம்

(C-7806)

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து
Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER

(C-7800)

உடனடியான வேலைவாய்ப்புக்கள்

கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜாம் / கோடியல் / பிஸ்கட் / பால்மா / யோகட் / சொக்லெட் / PVC / கிளவுஸ் / பொலித்தீன் / காமென்ட் / சோயா / பெயின்ட் / இறைச்சி / வாசனைத்திரவியம் / Printing / Cargills போன்ற தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி / லேபல் / பொதியிடல் / தரம்பிரித்தல் / களஞ்சிய பிரிவுக்கு 17 - 50 வயது ஆண் - பெண் தேவை.

உணவு தங்குமிடம் சகாய விலைகளில் சம்பளம் 19000/- 28000/- 35000/-

மேலதிக விபரங்களுக்கு :

தொடர்பு : 077 111 6770

C7799


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

FALC FRENCH LANGUAGE CENTRE

FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புகள்..

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
818 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்..

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100 % சித்தியடைந்துள்ளனர்......

| | | |
|---|---|---|
| ஆரம்பம் 05.07.14 Sat 10.30am.<br>No. 40, Palaly Road,<br>Jaffna.(ஆரியகுளம்) | ஆரம்பம்: 04.07 Fri 3.30pm.<br>No.181, 1st Floor,<br>Main Street, நெல்லியடி. | 021 320 2973<br>0779 789 456 |



பாராட்டி

வாழ்த்துகின்றோம்

கிளிநொச்சி வலயக் கல்விப் அலுவலகத்தில் நீண்டகாலமாக உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி 03.07.2014 ஆம் திகதி ஓய்வுபெற்றுச் செல்லும்



திரு.
க.மயில்வாகனம்

அவர்களை
அவர் தம் ஓய்வு காலத்தில்
குடும்பத்தாருடன்
சீரும் சிறப்புமாக
வாழ இறைவனை வேண்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

(C-7805)



கட்டார் / டுபாய் / சவுதி ஆகிய நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு!!!

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் ஏனைய முன்னணி நிறுவனங்களில் அதி உயர் சம்பளத்துடன் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

| | Job Category | Salary - Food |
|---|---|---|
| 1 | Masons | 1200+300+OT |
| 2 | Airpot Plumbers | 1300+OT+Food |
| 3 | Electrician | 1400+OT |
| 4 | Helpers (Air Port) | 900+OT+Food |
| 5 | Furniture Carpenter (Experience) | 1500-2000+OT |
| 6 | Sites Carpenter (Experience) | 1500-2000+OT |
| 7 | Spray, Furniture, Painter | 1300+OT |
| 8 | Curtain Maker | 1300+OT |
| 9 | Car Mechanic | 3249+OT |
| 10 | Car Mechanic Helper | 1843+OT |
| 11 | Cleaners | 900+OT |
| 12 | Heavy Driver (First Time) | 1500+OT |
| 13 | Accountants | 2256+OT |
| 14 | Heavy Drivers Original GCC License is Must | 1800+200+Trip allowance |

டுபாய்

| | |
|---|---|
| Carpenter | 1500-2000 + OT |
| Electrician | 1400-1600 +OT |
| Cushion | 1300+ OT |
| Cleaners (Indoor) | 900 + OT |

Saudi Driver Free Visa மற்றும Saudi Baladia Driver Visa க்களும் எம்மிடம் உள்ளன

தங்குமிடம், போக்குவரத்து, வைத்திய வசதி போன்றன இலவசம். ஒப்பந்த காலம் 2 வருடம் நீடிக்கப்படக்கூடியது. வேலை நேரம் 8 மணித் தியாலங்கள். கிழமைக்கு 6 நாட்கள் வேலை. ஏனைய நிபந்தனைகளும் விதிகளும் கட்டார் / டுபாய் / சவுதி நாட்டு சட்ட திட்டங்களுக்கமைவாக. கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம்.

எதிர்வரும் 6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் Green Grass Hotel இல் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்
Lanka Voice Hotline - 077 9527575 / 076 6697789
LL No.2248

AL/2248/ADVT10/14/11/15
capital recruitment international Pvt Ltd

No:130 3/1 3rd Floor grandpass Road, Colombo - 14

(C-7801)


## வடக்கிலிருந்து 4 தமி...

ரில் இவர்களை இறக்கிவிட்ட படகோட்டிகள் இலங்கைக்கு திரும்பினர்.

இரவு முழுதும் நடந்து வந்த இவர்கள்நேற்றுக்காலை தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்தினை அடைந்தனர். அங்கு பொலிஸார் அகதிகளிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். அகதியாக வந்த சாந்தி தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டம் தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் எனக்கு 5 குழந்தைகள். என் கணவர் என்னை விட்டு பிரிந்து சென்று விட்டதால் என் அம்மாவோடதான் இருக்கிறேன்.

அதனால், அரசாங்க சலுகை எதுவும எனக்கு கிடைக்கவில்லை. கூலி வேலை பார்த்து கிடைக்கும் சம்பாத்தியத்தில் குடும்பம் நடத்த முடியவில்லை. இலங்கையில் விலைவாசி அந்தளவுக்கு உயர்ந்து இருக்கிறது.

அதனால், தமிழ்நாட்டில் உள்ள முகாமகளில் எங்க சொந்தகாரர்களுடன் தங்கி விடலாம் என்று அம்மா, குழந்தைகள் எல்லோரும் கிளம்பினோம். படகு சின்னதாக இருந்ததால் அவர்களை அழைத்து கொண்டுவர முடியவில்லை. அதனால்நான்மட்டும்இங்கே வந் துள்ளேன் என்றார். (எ-11)

## பகிரங்க...

பகிரங்கமாயுள்ளது. அண்ணன் அழைத்தால் வருகிறேன் என்கிறார. ஆகவே தம்பியை அழைத்து வாருங்கள் என அண்ணனை நாம் கோருகிறோம்.

இன்று பாராளுமன்றத்தில் சும்மா இருக்கும் ஒரு தேசியப்பட்டியலை வீட்டுக்கு அனுப்பி விட்டு கோத்தா உள்ளே வரலாம். இந்த நாட்டில்இன்று திரைமறைவில் நடைபெறும் பல விடயங்களுக்கு இது ஓரளவாவது முடிவு கட்டும். 19 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ...

யகத்தில் இடம் பெற்றது.

பயிற்சிகளை முடித்து வெளியேறிய இந்த யுவதிகள், இராணுவ பெண்கள் படைப்பிரிவில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் குறித்த 30 தமிழ் யுவதிகளும் இராணுவத்தில் சேர்த்துகொள்ளப்பட்டதுடன் மூன்று மாத பயிற்சிகளின் பின்னர் நேற்று இவர்கள் இராணுவத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு இராணுவ தலைமையகத்தின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் வழங்கிய ஆலோசனைகளின் பேரில், தமிழ் யுவதிகள் இராணுவத்தில் இணைத்துக்கொள்ப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## வட்டரெக்க தேரரு...

ருச்சிர வெலிவத்த முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது இதற்கான உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

பாணந்துறை ஹிரன பாலத்திற்கு அருகே வீதியோரத்தில் வீழ்ந்திருந்த நிலையில் வட்டரெக்க விஜித தேரர் அண்மையில் கணடு பிடிக்கப்பட்டிருந்தார்.

அடையாளம் தெரியாத சிலர்தம்மை தாக்கி குறித்த இடத்தில் கைவிட்டுச் சென்றதாக பொலிஸாரிடம் தேரர் வாக்குமூலம் அளித்திருந்தார்.

எவ்வாறாயினும் பொலிஸாரை தவறான வழியில் இட்டுச் செல்லும் நோக்கில் தேரர் வாக்குமூலமளித் திருந்தமை விசாரணைகளின் போது தெரியவந்தது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று திரும்பியவுடன்கைது செய்யப்பட்ட வட்டரக்க விஜித்த தேரர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-11)

## முல்லைத்தீவில்...

வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த ஆணைக் குழுவின் அமர்வுகள் ஏற்கனவேகிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன.

இதன் போது மட்டக்களப்பில் 195 முறைப்பாடுகளுக்கு புறம்பாக 216 புதிய முறைப்பாடுகள்கிடைத்தன.

இதேவேளை ஆணைக்குழுவுக்கு இதுவரை 18,789 முறைப்பாடுகள்கிடைத்துள்ளன.

இவற்றில் ஐயாயிரம் முறைப்பாடுகள் பாதுகாப்பு தரப்பில் இருந்து கிடைத்தவையாகும்.

இந்த ஆணைக் குழு 14 ஆகஸ்ட் 2013 இல் ஸ்தாபிக்கப்பட்டது.

இது 1990 ஜூன் 10 திகதி முதல் 2009 மே 19 திகதி வரையில இடம்பெற்ற காணாமல் போதல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரத்தை கொண்டிருக்கிறது. (எ-11)

## இலங்கை...

வழங்கும்அவ்வாறான நெருக்கடி நிலைமைகளின் போது இலங்கையை மீட்டெடுக்கும் என ஒரு சாரார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

எனினும், ரஷ்யாவை அளவுக்கு அதிகமாக நம்ப முடியாது எனவும், கடந்த காலங்களில் பொலிவிய விவகாரத்தின் போதுரஷ்யாபாராமுகமாய்செயற்பட்டது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-11)

## முகமாலை பகுதி...

யகற்றும் தன்னார்வ பணிகள் படையினரின கண்காணிப்புடன் நடைபெற்று வருவதுடன், இந்தப் பகுதியில் அந்தப் பணி நிறைவாக 20 வருடங்கள், காலஅவகாசம்வேணடும் என குறித்த நிறுவனம்முன்னர் அரசாங்கததை கேட்டிருந்தமையும் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் குறித்த நிறுவனத்தின் பணியாளர்களே நேற்றுக் காலை கைவிடப்பட்ட பதுங்கு குழி ஒன்றிலிருந்து சடல எச்சத்தை மீட்டுள்ளனர்.

இதனோடு மீட்கப்பட்டிருக்கும் சடல எச்சத்துடன் உள்ள உடை விடுதலைப் புலிகளுடைய சீருடையா? என்பதில் சந்தேகங்கள் உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் அந்தப் பகுதியில் இருந்து படையினர் அணியும் தலைக்க வசம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

சடல எச்சத்துடன் ஒரு பெண்கள் அணியும் உள்ளாடை ஒன்றும்காணப்பட்டதாகவும் இதனை தவிர வேறு எவ்விதமான ஆதாரங்களும் பெணணுடையது என்பதை நிரூபிப்பதற்கு இல்லை என்றும் கூறப்படடது.

அக்கராயன்பகுதியில் போர் நடைபெற்ற பகுதியில் கடந்த 2010-ம் ஆண்டு மீட்கப்பட்ட எலும்பு எச்சங்களுடன விடுதலைப் புலிகளின சீருடை மற்றும் கழுத்தில்அணியும்தகடு மற்றும்குப்பி ஆகியனவும் கண்டுபிடிக்கப்பட்டது என கூறப்பட்டது. (எ-11)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA
THE ONLY OFFICIAL FRENCH LANGUAGE & CULTURAL CENTRE
FRENCH மொழியை FRENCH முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

☞ கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது, யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம். விரைவான பேச்சு ஆற்றல், STANDARD PRONUNCIATION,

☞ வருடம்தோரும் நூற்றுக்கணக்கானோர் (வடமராச்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) AF இல் படித்தே பிரான்ஸ் செல்கிறார்கள். குறிப்பு : பிரான்ஸில் பிரெஞ் கற்பதற்கு AF இன் CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1, A2 = ILTES : AF இன் கிளைகளில் மட்டுமே எழுத முடியும்) மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன.

இன்றே பதிவுசெய்யுங்கள்... புதிய வகுப்புகள் மிக விரைவில்...
தனிநபர்களிடம் சென்று பணத்தையும் நேரத்தையும் இழக்காதீர்கள்.

☞ வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்...

61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093.
கச்சேரி → ✝ → AF / ஆரியகுளம் → ஸ்ரான்லி றோட், றக்கா றோட் → AF



இது எம்மால் மட்டுமே சாத்தியம்

பகிரங்கமாகவே சவால் விடுகின்றோம்

சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி ...
செங்கன் விசா 26 நாடுகளிற்கு

3 வருட, 4 வருட, 5 வருட விசா நேர்முகத்தேர்வு
யாழ்.அலுவலகத்தில் 04.07.2014 இதுவே
இவ்வாண்டின் இறுதிச் சந்தர்ப்பம்

(நிபந்தனைகளுடன்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090





பழைய ஓடு உடன் தேவை

கோயில்வீடுஒன்றுக்கு 2300 பழைய ஓடுகள் உடன் தேவை. கோயில் ஓடுகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

தொடர்பு : 0773151326


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org